19

3

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

விலை அணா 8

GRAMS : YESIND PHONE { OFFICE 127
MILL 171

# ஸ்ரீ கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ்

ஸ்ரீ கோதண்டராம் ஸ்பின்னிங் மில்ஸ் ரோடு

மாகாளிப்பட்டி

மதுரை


கைத்தறிக்கு வேண்டிய நூலும்

விசைத்தறிக்கு வேண்டிய நூலும்

தயாரிப்பவர்கள்

குமரி மலர்

# சுவர்ண மாளிகை



## P.A.ராஜு செட்டியார் & பிரதர்

P-1-49

கோயமுத்தூர்

நம்பிக்கை

நாணயம்

உத்தரவாதம்

மருந்துகள் கிடைக்குமிடம்

SP. M. மெடிக்கல் மார்ட்

15 கீழச் சித்திரை வீதி

மதுரை

பிராஞ்சுகள் :

97, பாலேஸ் ரோடு - மதுரை

43, கிருஷ்ணராயர் தெப்பக்குளத் தெரு - மதுரை

எங்கள் பாலேஸ் ரோடு பிராஞ்சில் பகல், இரவு, எல்லா நேரங்களிலும் மருந்துகள் கிடைக்கும்.




குமரி மலர்

மலர் 12 — குமரிமலர் — இதழ் 9

மன்மத — மார்கழி

# உள்ளுறை

பக்கம்

1. இராமகாதையின் சிறுபாத்திரங்கள்
   — ந. சுப்பு ரெட்டியார் 1
2. பேச்சு மேடை 10
3. செய்திக் கோவை 27
4. சூரிய கிரஹணம் 45
5. ஆப்பிரிக்கப் பிரயாணம்
   —எஸ். ஸி. தியாகராஜன் 55
6. கலையும் தொழிலும் கலந்த படிப்பு 65
7. இந்தியாவில் மின்சார அபிவிருத்தி 69
8. அரசியல் அமைப்பில் மனித உரிமை 78

# இராமகாதையின் சிறுபாத்திரங்கள்

ந. சுப்பு ரெட்டியார்

காரைக்குடி கம்பன் திருநாளை அறியாத தமிழர்களே இல்லை என்று சொல்லவேண்டும்; அலைகடலுக்கு அப்பாலுமுள்ள தமிழர்களும் திருநாள் நிகழ்ச்சிகளைச் செவி மடுத்துத் துய்க்கிறார்கள். திருநாளின் நான்காவது நாள் நிகழ்ச்சிகள் நாட்டரசன் கோட்டையிலுள்ள கம்பன் கோயிலில் நடைபெறும் இத் திருநாளைக் கண்டுகளிக்க என் நண்பர்களும், நானும் சென்றோம். ஒரு பஸ்ஸும் வேனும் (Van) எங்களை ஏற்றிச் சென்றன. வழியில் பசியாற்றிக் கொள்வதற்கு எங்களுக்குத் தேவையான உணவு, குடிநீர் முதலிய பொருள்களை எடுத்துச் சென்றோம். ஒரு பெரிய பாத்திரத்தில் குடிநீர் நிரப்பி அதை பஸ்ஸில் வைத்திருந்தோம். உணவு, இலை முதலியவை வேனில் இருந்தன. வழியில் பஸ்ஸில் இருந்த நண்பர் ஒருவர் பருகும்நீர் கேட்டார். பாத்திரம் நிறையப் பருகும் நீர் இருந்தது; அதிலிருந்து அதை எடுப்பதற்குச் செம்போ டம்ளரோ அருகில் இல்லை! என்ன செய்வது? அப்போதுதான் சிறு பாத்திரங்களின் இன்றியமையாமையை எல்லோரும் உணர்ந்தார்கள். "இப்படித்தான் ஒரு காவியத்திலும் சிறு பாத்திரங்கள் அவ்சியமாக இருக்கின்றன" என்று அவ்வமயத்தில் யான் கூறியபோது எல்லோரும் கேட்டு மகிழ்ந்தார்கள். சிறு பாத்திரங்கள் இல்லாவிட்டால் காவியத்தில் ஒன்பான் சுவையும் பத்தழகுகளும் பிறவும்

நன்கு சிறந்து விளங்க முடியாது; காவியத் தலைவனின் குண நலங்களையும் நாம் செவ்வனே அறிந்துகொள்ள இயலாது; கதைப்போக்கும் பரந்துசெல்ல முடியாது.

சிறு பாத்திரப் படைப்பு

சிறு பாத்திரங்களைப் படைப்பதில்தான் ஒரு சிறந்த கவிஞனின் பேராற்றல் வெளிப்படுகிறது; அவர்களைக் காவியத்தின் உறுப்புக்களாகி விடும்படி வைத்துப் பின்னி விடுகிருன் கவிஞன். காவியத்தின் கட்டுக் கோப்பி லிருந்து அவர்களை நீக்க முடியாது; அப்படி நீக்கினலும் அதில் ஒரு குறை தோன்றும்; காவியமும் முற்றுப் பெருது. காவியத்தை வனப்புடைய ஒரு மாளிகைக்கு ஒப்பிட்டால், சிறு பாத்திரங்களை அம்மாளிகையிலுள்ள பலகணிகளுக்கு ஒப்பிடலாம். இச்சிறு பாத்திரங்களின் மூலந்தான் காவியத்தில் நிகழும் பல காட்சிகளையும் காண முடிகிறது. நாம் இவர்கள் வயப்பட்டிருக்கும்போது தான் காவியத் தலைவனைப்பற்றி அதிகம் அறிந்து கொள்ளுகிறோம். இவர்கள்தாம் காவியத் தலைவனின் குண நலன்களைத் திறனய்கின்றனர். மற்று, காவி யத்தை மங்கையர் வீட்டு முற்றங்களில் தீட்டும் கோலத் திற்கு ஒப்பிட்டால், சிறு பாத்திரங்களை அக்கோலம் போடுவதற்கு இடப்படும் புள்ளிகளுக்கு ஒப்பிடலாம். புள்ளிகளால் கோலம் சிறப்பதுபோல சிறு பாத்திரங் களால் காவியம் வனப்புடையதாகிறது. சிறு பாத்திரங் களை நீக்கிவிட்டால் காவியம் தேர்வின் நிமித்தம் மாணக் கர்களுக்கு வெளியிடப்பெறும் சுருக்கம்போல் (Examination summary) அமைந்துவிடும். காவியமும் அழகை முற்றும் இழந்து கிளைகளும் கொப்புகளும் இன்றி நிற்கும் ஓர் அடிமரம்போல் காட்சியளிக்கும். இந்த எண்ணங்களை அடிப்படையாகக்கொண்டு இராம காதையில் வரும் சிறு பாத்திரங்களை ஆராயவேண்டும்.

### சிறு பாத்திரப் படைப்பின் நோக்கம்

பெரும்பாலும் கவிஞன் சிறு பாத்திரங்களைப் படைக்கும்போது இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டு தான் அவர்களைப் படைக்கிறான் என்று சொல்லலாம். முதலாவது, அவர்கள் கதை வளர்ச்சிக்கு யாதாவது ஓர் அம்சத்தில் துணைபுரிவார்கள்; காவியத்தின் திருப்புமையங்களாக அமைந்து கதையை விரைவாக முடுக்கிச் செல்லவும் துணை செய்வார்கள். இரண்டாவது, காவியத் தலைவனின் குண நலன்களைப் புலப்படுத்தி நிற்பார்கள். இராமகாதையில் காணப்பெறும் தாடகை, விசுவாமித்திரர், வசிட்டர், நீலமாலை, சனகன் மந்தரை, சுமந்திரன், குகன், சத்துருக்கன், சுமத்திரை, சூர்ப்பனகை, மாரீசன், சடாயு, தாரை, சுக்கிரீவன், வாலி, அங்கதன், திரிசடை, மண்டோதரி, மாலியவான், மகோதரன், அதிகாயன், கரன் ஆகியவர்களைச் சிறு பாத்திரங்களாகக் கொள்ளலாம். இவர்களை வைத்துக்கொண்டு கவிஞன் காவியத்தை எவ்வாறு நடத்திச் செல்லுகிறான் என்பதைக் கவனிக்கவேண்டும். கம்பன் காவியத்தையும் வான்மீகி இராமாயணத்தையும் ஒப்பிட்டுப் படிப்பவர்கள் பாத்திரப் படைப்பில் இரு மகா கவிகளின் கைத்திறன்களையும் காண்பார்கள்; வான்மீகி காட்டும் பாத்திரங்கள் கம்பன் கைத்திறனால் மிகச் சிறப்பாக மிளிர்வதைக் கண்ணுறுவார்கள். வான்மீகியைப் பயிலும்போது எந்தெந்த அம்சங்களில் பாத்திரப் படைப்பை மாற்றியமைக்கலாம்-மாற்றியமைக்கவேண்டும் என்று எண்ணும் அன்பர்கள் கம்பனைப் பயிலும்போது அவன் கை வண்ணத்தையும் கலை வண்ணத்தையும் நன்கு அறிவார்கள்: அறிந்து பாராட்டவும் செய்வார்கள்; தம்மையும் அறியாமல் இறும்பூது அடைவார்கள். மேலே கூறிய இரண்டு முக்கிய நோக்கங்களைக்கொண்டு சிறு பாத்திரப் படைப்பை ஆராய்வோம்.

கதை வளர்ச்சி: தாடகை விசுவாமித்திரர்

சிறு பாத்திரங்கள் கதை வளர்ச்சிக்கு எவ்வாறு துணை செய்கின்றனர்? இயக்கர் குலத்தில் பிறந்த தாடகை 'தமிழெனும் அளப்பருஞ் சலதிதந்த' அகத்தியனின் சாபத்தால் அரக்கியாகி இராவணன் ஆட்சிக்குக் கீழ் அடங்கும்போது கதை நீளுகிறது. இவள் பெற்றெடுத்த மாரீசனும் கதையை வளர்க்கத் துணை செய்கிறான். தாடகை இராமன் அம்பால் இறந்து தரையில் வீழ்ந்த காட்சியைக் கம்பன்,

முடியுடை அரக்கற்கு அந்நாள்
முந்திஉற் பாத மாகப்
படியிடை யற்று வீழ்ந்த
வெற்றியம் பதாகை ஒத்தாள்

என்று காட்டுகிறான். பின்னால் நடக்கவிருக்கும் இராவண வதத்துக்குத் தீ நிமித்தமாக அவனுடைய வெற்றிக்கொடி அறுந்து வீழ்ந்ததுபோல் தாடகை இறந்து வீழ்ந்தாள் என்று கவிஞன் கூறும்போது உண்மையிலேயே நாம் இராமாயணம் முழுவதையும் மனக் கண்முன் காண்கின்றோம்; கொடியைப் பெண்ணுக்கு உவமைகூறி அவ்வுவமையாலேயே வெற்றிக் கொடியையும் நினைவுக்குக் கொணர்ந்த கவிஞனின் கற்பனையைக் கண்டு மகிழ்கின்றோம். அயோத்தியில் அருந்தவத்தின் விளைவாகத் தசரதனுக்குப் புதல்வனாகத் தோன்றி வளர்ந்துவரும் இராமனை உலகறியச் செய்வதற்குத் துணையாக நிற்கிறார் விசுவாமித்திரர்; பள்ளிப் பிள்ளையாக இருந்த இராமனுக்கு வாழ்க்கையில் ஈடுபட வாய்ப்பினை அளிக்கிறார். வசிட்டரிடம் ஏட்டுப் படிப்பாகப் பயின்றவற்றை வாழ்க்கையனுபவத்தில் காட்ட இவரால் தான் பல வாய்ப்புக்கள் இராமனுக்குக் கிட்டுகின்றன.

அயோத்தியிலிருக்கும் இராமனை மிதிலைக்குக் கொண்டு வந்து திருமணத்தை முடிப்பித்தலால் கதை வளர்கிறது.

மந்தரை—சூர்ப்பனகை

மந்தரையின் சூழ்ச்சி இராமகாதையின் முதல் திருப்புமையமாகும். பட்டம் கட்டிக்கொண்டு பாராள வேண்டிய இராமனை மரவுரி தரித்துக்கொண்டு கானகச் செல்ல வைத்தது இவளது சூழ்ச்சிதான். 'இன்னல் செய் இராவணன் இழைத்த தீமை'தான் இவளது வடிவங்கொண்டு தென்னிலங்கை வேந்தனுக்கு இராமன் வடிவில் காலனை அனுப்பிவைக்கிறது. மந்தரையின் சூழ்ச்சி ஒரு பெரு விசைபோல் நின்று கதையைப் பேரெடுப்புடன் இயக்குகிறது. இவளது சூழ்ச்சிக்குப் பிறகு காவியத்தில் விரைவுடன் நடைபெறும் பல நிகழ்ச்சிகள் பல உணர்ச்சிச் சிகரங்களைக் காட்டுகின்றன. நாட்டிலிருக்கும் இராமன் காட்டுக்கு வந்துவிடுகிருன். இராமனைக் கண்டதிலிருந்து அவன்மீது கொண்ட சூர்ப்பனகையின் காமம் இலங்கை ஏகாதிபத்தியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கத் துணை புரிகிறது. இலங்கையிலிருக்கும் இராவணன் பஞ்சவடிக்கு வரவும் பஞ்சவடியிலுள்ள சீதை இலங்கைக்குக் கவர்ந்து செல்லப்படவும் அவள் நிமித்தம் இராம இலக்குமணர் இலங்கை சென்று அரக்கர்களுடன் போர் புரியவும் இவள் துணை செய்கிறதால் கதை நீளுகிறது. இவள் இராவணனிடம் வைத்த 'வர்த்தி'யால்தான் அரக்கர்கள் அழிகின்றனர். இதனை மனத்தில் கொண்டுதான் கம்பனும்,

> நீலமா மணிநிற நிருதர் வேந்தனை
>
> மூலநா சம்பெற முடிக்கும் மொய்ம்பினள்

என்றும் 'தன்கிளைக்கு இறுதி காட்டுவாள்' என்றும் இவளைக் காட்டுகிருன். சூர்ப்பனகையின் காதல் ஒரு

தொத்துநோய் போல் வேலை செய்கிறது. இந்நோய் இராவணனைப் பற்ற, அவன் சீதையின் மேல் காதல் கொள்ளுகிருன். எவ்வளவோ ஆண்மைகளைப் பெற்றிருந்தும் 'பிறன்மனை நோக்காத பேராண்மை' இராவணனிடம் இல்லாததால் அவன் அழிகிருன்; அமரர் கூற்ருக இருந்தவன் அசுரர்களின் பிரளயமாகிருன். சூர்ப்பனகையின் காமம் அவளுக்கு உறுப்புக் குறையை விளைவிப்பதுடன் ஒரு பெரிய அரக்க ஏகாதிபத்தியத்திற்கே அவமானத்தையும் ஏற்படுத்தி விடுகிறது. இதைக் கவிஞன்,

> கொலைது மித்துயிர் கொடுங்கதிர் வாளின்அக் கொடியாள்
> முலைது மித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை
> மலைது மித்தென இராவணன் மணியுடை மகுடத்
> தலைது மித்தற்கு நாட்கொண்ட தொத்ததோர் தன்மை

என்று காட்டுவது எண்ணி எண்ணி மகிழ்தற் குரியது. சூர்ப்பனகை மட்டிலும் இராமன்மீது காதல் கொண்டிரா விட்டால் இராமன் வாழ்க்கை பஞ்சவடியிலேயே கழிந்து விடக்கூடும். 'இராமன் பரக்கும் தொல்புகழ் அமுதமாகிய' இராமகாதை தோன்ற வாய்ப்பே இராது போய்விடக் கூடும்.

மாரீசன்—சடாயு

பஞ்சவடியில் நிம்மதியாகத் தவவாழ்வு வாழ்ந்த இராமனை இலங்கைக்கு அனுப்புவதற்குக் காரணமாக இருந்தவன் மாரீசன்; இவன் கதையின் இரண்டாவது திருப்புமையமாக விளங்குபவன். மாரீசன் இராமன் கணையால் மாண்டபிறகு கதை விரைவாகச் செல்லுகிறது. சீதாப்பிராட்டி சிறைப்படுதல், சடாயு திரு நாடு அலங்கரித்தல், இராம-சுக்கிரீவ நட்பு, வாலி வானுக்கப்புரத் துலகணுதல், அனுமன் தூது, இலங்கை அழிதல்,

வீடணன் அடைக்கலம், கடலில் அணையிடல் முதலிய நிகழ்ச்சிகள் இராவண வதத்துக்கு ஆயத்தமாக நடைபெறுகின்றன. மாரீசன் காவியத்தில் ஒரு பெருவிசைபோல் நின்று கதையை முடுக்கிவிட்டுத் தானும் இறந்துபடுகிறான். பிற பாத்திரங்களும் இவ்வாறே கதை வளர்ச்சிக்குத் துணை செய்கின்றனர்.

காவியத் தலைவனின் குணநலன்கள் : குகன்.

இராமனின் 'கைவண்ணத்தையும் கால் வண்ணத்தையும்' விசுவாமித்திரர் உலகறியச் செய்ததை மேலே கண்டோம். அவ்வாறே அவன் குண நலன்களை வெளிப்படுத்தச் சுமந்திரன் துணை செய்கிறான். இராமனுடைய அருங்குணங்களை முதன் முதலாக வெளிப்படுத்துபவன் குகன். இவன் சந்திப்பால்தான் இராமன் ஏழை வேடனையும் உடன்பிறந்தவனாகக் கொள்ளும் பரந்த நோக்கமுள்ளவன் என்பதை இவ்வுலகம் அறிய முடிகிறது. 'அன்புள இனி நாமோர் ஐவர்கள் உளரானோம்' என்ற இராமனுடைய உயர்ந்த சகோதரத்துவம் வெளிப்பட இக் குகன் அரியதோர் வாய்ப்பினை நல்குகிறான். அயோத்தியிலிருந்து சித்திரகூடம் வருவதற்குள் இராமன் உலகம் பாராட்டும் உத்தமனாகத் திகழ்கிறான். கைகேயி வரங்களைத் தருமாறு தசரதனைக் கேட்கும்போது வீசத்தொடங்கிய இராமனுடைய தியாக ஒளியைக் கங்கை வேடன் பின்னணியாக நின்று மிகுதிப்படுத்துகிறான்.

மாரீசன்

காவியத்தில் மாரீசன் செய்யும் செயல்களைக் காணும்போது இவன் இராவணனுக்கு வெளி நாட்டு அமைச்சன்போல் நின்று துணை செய்கிறான் என்பதை அறிகிறோம். சூர்ப்பனகையைப் போலவே இராமனைப்பற்றிய பல செய்திகளை இவன் இராவணனுக்குத் தருகிறான்.

இராம பக்தர்கள் இராமனுடைய வீரச் செயல்களையும் அற்புதச் செயல்களையும் நேரில் பார்த்தோ பிறர் சொல்லக் கேட்டோ அறிந்தவர்கள். மாரீசனே அவற்றை நேரில் அனுபவித்து உணர்ந்தவன்; சூடுகண்ட பூனை. சீதையைப் பெறுவதற்கு மாய மானாக வடிவெடித்துச் செல்லவேண்டும் என்று இராவணன் இவனைக் கேட்க வந்தபோது,

> எம்பிக் கும்மென் அன்னை தனக்கும் இறுதிக்கோர்
> அம்புக் கும்போர் வில்லி தனக்கும் அயல்நிற்கும்
> தம்பிக் கும்மென் ஆண்மை தவிர்ந்தேன்

என்று தான் பெற்ற அனுபவத்தை எடுத்துக் காட்டுவதை நோக்குக. இவ்வாறு பல நிகழ்ச்சிகளை எடுத்துக் காட்டி இராமன் தன் வாளிகளால் அரக்கர் குலத்தையே அழித்து விடுவான் என்று எச்சரிக்கையும் தருகிறான். சீதையைத் தூக்கிச் செல்வது பெருந்தீங்கு விளைக்கும் என்று தடுத்துக் கூறியவர்களில் வீடணனுக்கு முற்பட்டவன் மாரீசன். அவனே தேவகாரியம் நிறைவேறுவதற்குக் களப்பலியாகவும் திகழ்கிறான். இராமாயண பாத்திரங்களில் புத்தியும் பேசுந்திறமும் தத்துவ உணர்வும் அரக்கர்களிடத்தில் காணப்படுவதைப்போல் முனிவர்களிடமும் பார்க்கமுடியாது. அவ்விதம் சிறப்பு வாய்ந்தவர்களில் ஒப்புயர்வற்றவன் மாரீசன். இராவண வதம் முடிவதற்கு ஆயத்தம் செய்பவர்களில் தலையாயவர்கள் சூர்ப்பனகையும் மாரீசனும் என்று கூறினாலும் பொருந்தும். இவ்வாறே பிற பாத்திரங்களும் இராமனுடைய குண நலன்களை வெளிப்படுத்தத் துணை புரிகிறார்கள் என்பதைக் காட்டலாம்.

முடிவு

சிறிய பாத்திரங்கள் கட்டிடத்தில் வைத்துக் கட்டப் பெறும் சல்லிக்கற்கள் போன்று பதிக்கப்பெற்று

விடுகிறார்கள். கட்டிடத்தின் வலிவுக்குளவ்வாறு இக்கற்கள் துணை நிற்கின்றனவோ அவ்வாறே சிறு பாத்திரங்களும் காவியத்தின் கட்டுக்கோப்பிற்குப் பெருந்துணையாக இருக்கின்றனர். சிறு பாத்திரங்களைப் படைத்துக் காவியத்தில் அவர்களை நடமாட விடுதலில் கவிஞனின் கலைத்திறம் வெளிப்படுதல் போலவே அவர்களுக்குக் கதையிலிருந்து விடைகொடுத்தலிலும் அதிகத் திறமையைக் காணலாம். செகப்பிரியர் போன்ற பெருங் கவிஞர்கள் சிறு பாத்திரங்களுக்கு விடை கொடுத்தல் (disposal) கலைத்திறனுடன் மிளிர்வதை ஆங்கில இலக்கியங்களைப் பயின்றார் அறிவார்கள். இராமாயணத்தில் வரும் சிறுபாத்திரங்கள் விடை பெறுதலில் இக் கலைத்திறம் நன்கு விளங்கும். தாடகை இராமன் கணையால் இறத்தல், விசுவாமித்திரர் தவம் செய்யச் செல்லல், மந்தரை, சூர்ப்பனகை இவர்களைப்பற்றி ஒன்றும் சொல்லாது விடப்படல், மாரீசன் காகுத்தன் கணையால் மாளுதல் முதலியவற்றை எண்ணிப்பார்த்தால் இவ்வுண்மை ஓரளவு விளங்கும். சிறு பாத்திரங்கள் 'வருதலும் போதலும்' காவியத்தைக் கலைத்திறனுடன் மிளரச் செய்கிறது.

# பேச்சு மேடை

---

## காந்தியடிகள்

இந்தியாவில் காந்தியடிகள் அஹிம்சை முறையைப் பரீட்சித்துப் பார்த்திருக்கிருர். இது ஒன்றே காந்தியடிகள் மனித குலத்துக்குச் செய்த மகத்தான சேவையாகும்.

காந்தியடிகளுக்கு, சிறிய, பெரிய விஷயம் என்றே கிடையாது. எந்த விஷயமாய் இருந்தாலும், எவ்வளவு சிறிய விஷயமாய் இருந்தாலும் கவனிக்காமல் விடமாட்டார். அற நெறிகளை அனுஷ்டிப்பதில் அவர் கண்ணும் கருத்துமாய் இருந்ததுதான் அதற்குக் காரணம்.

ஒரு குரங்கைச் சுடுவது அல்லது கன்றுக்குட்டியைக் கொல்வது போன்ற சிறு விஷயம்கூட, சுயராஜ்யம் பெறுவதைப் போன்ற பெரிய விஷயம் மாதிரி காந்தியடிகளின் கவனத்தை ஈர்க்கும். அஹிம்சை, சத்தியம் போன்ற அற நெறிகளை அவர் விசால மனப்பான்மையுடன் நோக்கினுர், நமது நாடு எத்தன்மையதாக இருக்க வேண்டும், மனித வர்க்கம் எப்படி இருக்க வேண்டும் என்னும் பூரணச் சித்திரத்தைத் தமது மனக் கண்ணுல் பார்த்தார். சத்தியமும் அஹிம்சையும் சமூகத்தின் அஸ்திவாரமாக அமைந்து வேரூன்ற வேண்டுமென்பதே காந்தியடிகளின் அவா.

நம் நாட்டில் காணப்படும் பலதரப்பட்ட ஏற்றத் தாழ்வுகளில், செல்வத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வும் ஒன்று. ஒரு சிலரே பணக்காரர்களாக இருக்கின்றனர்.

பலர் ஏழைகளாக இருக்கின்றனர். நாம் பலாத்காரத்தைக் கடைப்பிடித்தால் ஏழைகள் சுலபமாக பணக்காரர்களிடமிருந்து அனுகூலம் பெறமுடியும். ஆனால் காந்தியடிகள் அவ்வழியில் சிந்திக்கவில்லை. வேறொரு வழியைக் காட்டினார்; அதாவது ஏழைகளின் நன்மைக்கு, செல்வத்தின் தர்மகர்த்தர்களாகத் தங்களைப் பணக்காரர்கள் கருத வேண்டும் என்று சுட்டிக்காட்டினார். இந்தப் பெரிய பிரச்னைகளைத் தீர்த்துவைக்க காந்தியடிகள் விரும்பினார். மற்ற நாடுகளில் பலாத்காரம் மூலம் இப்பிரச்னைகள் தீர்க்கப்பெற்றிருக்கின்றன. ஆனால் எல்லாப் பிரச்னைகளையும் பலாத்காரம் மூலம் தீர்க்க முடியும் என்று நினைப்பது தவறு. ஒவ்வொரு செயலுக்கும் அதன் சாதக பாதக விளைவுகள் இருக்கத்தான் செய்யும். உலகில் பரம்பரை பரம்பரையாக நாடுகளுக்கு இடையே போர்கள் நடந்து வந்திருக்கின்றன. போர்களை நிறுத்துவதற்காக இரண்டு பெரிய போர்கள் நடந்ததை நமது தலைமுறையிலேயே கண்டோம். போர் முடிந்துவிட்டது என்றோ, அல்லது இவ்வளவு காலமாக அனுசரிக்கப் பெற்று வந்த பலாத்கார முறை வெற்றி பெற்றது என்றோ யாராவது சொல்ல முடியுமா?

மதமாய் இருந்தாலும் சரி, பொருளாதாரமாய் இருந்தாலும் சரி, அரசியலாய் இருந்தாலும் சரி பலாத்காரம் எந்தப் பிரச்னையையும் ஒருபோதும் தீர்த்து வைத்ததில்லை. அப்படித் தீர்த்து வைக்கப்பெற்றிருந்தால், இன்று தீர்த்து வைப்பதற்கு எந்தப் பிரச்னையும் இருந்திருக்காது. ஆனால் இன்று பிரச்னைகள் இருக்கின்றன என்பது ஒன்றே, இதுவரை உலகம் கையாண்டு வந்துள்ள பலாத்கார வழி பயனற்றது என்பதற்குச் சான்று.

அஹிம்சை மூலமே நாம் பிரச்னைகளைத் தீர்க்க முடியும். ஆனால் அதில் சிரமம் உண்டு. சிரமம் இருக்கிறது என்றாலும், பலாத்காரத்தால் ஏற்படும் அளவுக்குக் கிடையாது.

உலக மக்கள் இப்பொழுது காந்தீயத்தில் அதிகப் பற்றுதல்கொள்ள ஆரம்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது. அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டு முதலியவை உலகத்தைப் பயமுறுத்துவதால், அதற்கு மாற்றுவழி தேடுவது இயற்கையே. அப்படி மாற்றுவழி தேடுகையில் காந்தீயத்தை நினைக்கின்றனர். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர்கள் காந்தீயத்தைப் பூரணமாகப் புரிந்து கொள்ளவில்லை. காந்தியடிகளை மற்றவர்கள்தான் புரிந்து கொள்ளவில்லை என்று மட்டும் சொல்ல முடியாது. காந்தியடிகளுடன் இந்நாட்டிலேயே நாம் வசித்து வந்திருந்தும் கூட, நாமே அவரை முழு அளவுக்குப் புரிந்து கொள்ளவில்லை.

நம்மில் ஒருவரால் காந்தியடிகள் சுட்டு வீழ்த்தப் பட்டது, இந்தியாவுக்கு மட்டுமின்றி உலகத்துக்கே துரதிர்ஷ்டமாகும்.

கடைசி நிமிஷத்தில் அஹிம்சைக்குச் சோதனை ஏற்பட்டது. அந்தச் சோதனையை இராமமந்திரத்துடன் காந்தியடிகள் வென்றார்.

—ஸ்ரீ ராஜேந்திர பிரசாத்

### இந்திய-ருஷ்ய நட்பு

பகை கூடாது என்றும், எல்லோரிடமும் நேசமாக இருக்கவேண்டும் என்றும் காந்தியடிகள் நமக்கு உபதேசம் செய்தார். அதே சமயத்தில் நமது கொள்கைகளை நாம் விட்டுக் கொடுக்கக்கூடாது என்றும் வற்புறுத்தி

வந்திருக்கிறார். இந்தக் கொள்கை மூலமாகக் கருத்து வேற்றுமையுள்ள நாடுகளைக் கூட நாம் அணுக முடியும். நமக்கு உலகம் எங்கும் நண்பர்கள் உள்ளனர்; குறைந்த பட்சம் விரோதிகள் இல்லை.

நாங்கள் எல்லோருடனும் நேசமாக வாழ விரும்புகிறோம். எவருடனும் நாங்கள் போட்டியிட விரும்பவில்லை. நாங்கள் கபடமற்றவர்கள். எங்கள் தேசீயச் செல்வத்தை அபிவிருத்தி செய்யப் பல திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். எல்லோருக்குமே சந்தர்ப்பம் கிடைக்கும் பொருட்டு நாங்கள் வகுத்துக் கொண்ட சோஷலிஸ கொள்கையைப் பின்பற்றுகிறோம். பெரிதும் முன்னேற்றமடைந்துள்ள சோவியத் ருஷ்யாவிடமிருந்து நாங்கள் பல விஷயங்களைக் கற்றுக்கொள்ள விரும்புகிறோம். பஞ்சசீலக் கொள்கை அடிப்படையில் இந்தியா மற்ற நாடுகளின் நட்பைப் பெற விரும்புகிறது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன், பஞ்சசீலக் கொள்கையை ஏற்றுக்கொண்டு இந்தியாவும், செஞ் சீனவும் கூட்டு அறிக்கை விடுத்தன. பஞ்சசீலக் கொள்கை இப்பொழுது உலகில் பரவிக் கொண்டிருக்கிறது. இதை சோவியத் ருஷ்யாவும் ஒப்புக் கொண்டிருப்பதைப் பற்றி மகிழ்ச்சி யடைகிறேன்.

பஞ்சசீலக் கொள்கையை உலகம் ஒப்புக் கொண்டால், எல்லா கஷ்டமான பிரச்னைகளும் தீர்ந்துவிடும் என்று நம்புகிறேன். குறைந்த பட்சம் யுத்தத்தில் புத்தி செல்லாது. யுத்தம் மூலம் தகராறுகளைத் தீர்த்துக் கொள்ள ஒருவரும் விரும்ப மாட்டார்கள்.

உலகம் முழுவதும் ஓர் உறுப்பாக இயங்கி வருகிறது. இன்னும் தேசங்களுக்கிடையே பரஸ்பரம் அவநம்பிக்கை இருக்கிறது. இந்த அவநம்பிக்கை நீங்கி தேசங்களுக்

கிடையே நெருங்கிய உறவு ஏற்பட வேண்டும். கருத்து வேற்றுமைகள் நட்புக்குத் தடையாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு நாட்டிடமும் நல்ல குணங்களும் உள்ளன.

சமாதானத்துக்கான முயற்சிகளை, உலகம் தனது சொந்த நலனைக் கருதித் தொடர்ந்து செய்யவேண்டும். வெறும் பேச்சு பலனளிக்காது. செயலில் இறங்க வேண்டும். புல்கானின், குருசேவ் வருகையால், இந்தியாவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே, பஞ்சசீல அடிப்படையில் நட்பு பலப்படும்.

—இந்தியப் பிரதமர் நேரு

ருஷ்ய-இந்திய நட்பு

ருஷ்யா-இந்தியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலுள்ள நட்பு, பல்லாண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டது. சச்சரவுகள் அல்லது மனஸ்தாபங்கள் காரணமாக இந்த நட்பு எந்தக் காலத்திலும் ஒருபோதும் பாதிக்கப்பட்டதில்லை. எங்கள் நாட்டில் ஏற்பட்ட அக்டோபர் புரட்சிக்குப் பின்னரே எங்கள் நாட்டு மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே நட்பு பலமடைய ஆரம்பித்தது.

இந்தியர் நடத்திய சுதந்திரப் போரை ருஷ்ய மக்கள் அனுதாபத்துடனும் ஆர்வத்துடனும் கவனித்து வந்தனர். இறுதியில் உங்கள் போராட்டத்தில் நீங்கள் வெற்றியடைந்தது கண்டு, ருஷ்யர்களாகிய நாங்கள் பெரு மகிழ்ச்சி அடைந்தோம்.

எங்களுடைய மாபெருந் தலைவர் லெனின் தேசங்களின் சமத்துவத்தையும், எல்லா மக்களுக்கும் சுய நிர்ணய உரிமை உண்டென்பதையும் ஒப்புக்கொண்டு வற்புறுத்தி வந்திருக்கிறார். அதுவே எங்களுடைய வெளிநாட்டுக் கொள்கையின் ஒரு முக்கியமான அம்சம்.

இந்தியா சுதந்திர நாடான பிறகு, நமது இருநாடுகளுக்கு மிடையே, நட்பை அபிவிருத்தி செய்வதற்குத் தகுந்த புதிய சூழ்நிலை ஏற்பட்டது. ஒருவர் சுதந்திரத்தை மதிப்பது, ஆக்கிரமிக்காமலிருப்பது, ஒருவர் உள்நாட்டு விவகாரங்களில் மற்றொருவர் எக்காரணம் கொண்டும் தலையிடாமல் இருப்பது, சமத்துவமாகப் பாவிப்பது, அன்புடனும் ஒத்துழைப்புடனும் கூடி வாழ்வது என்ற பலமான அஸ்திவாரத்தின் மீது, நாம் நமது இரு நாடுகளுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தி வருகிறோம். தலையிடாமை என்பது பொருளாதாரத் துறையில் ஆகட்டும், அரசியல் துறையில் ஆகட்டும், கொள்கை விஷயத்தில் ஆகட்டும், எல்லாவற்றுக்கும் பொருந்தும்.

சமாதானத்தைப் பலப்படுத்துவதற்கும் சர்வதேச நெருக்கடியைக் குறைப்பதற்கும் இந்திய அரசாங்கம் தீவிரமாக உழைத்து வருகிறது.

இந்திய அரசாங்கமும், இந்திய மக்களும் தங்கள் தேசீயப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு எடுத்துக் கொண்டுள்ள முயற்சியில் சோவியத் ருஷ்ய மக்கள் மிகுந்த அனுதாபம் கொண்டிருக்கின்றனர்.

பொருளாதார அபிவிருத்தி மூலந்தான் ஒரு நாடு உண்மையான சுதந்தரத்தைப் பெற முடியும் என்பது நாங்கள் அனுபவ வாயிலாகக் கண்ட உண்மை.

தொழிற்சாலைகள், மின்சாரசக்தி உற்பத்தி நிலையங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், ஆக்க வேலைகளுக்கு அணுசக்தியைப் பயன்படுத்திக் கொள்வது சம்பந்தமாக எங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை நாங்கள் இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளத் தயாராய் இருக்கிறோம்.

—ருஷ்யப் பிரதமர் புல்கானின்.

கடவுளின் குழந்தைகள்

கறுப்பு, பழுப்பு, வெள்ளை, மஞ்சள் ஆகிய எந்த நிறத்தவராய் இருந்தாலும், அவர்களுடைய பெற்றோர்கள் ஒன்றே தான். கிறிஸ்துவ வேதப் புத்தகமான பைபிளும் இதைத்தான் சொல்லுகிறது என்று நினைக்கிறேன். கருணையம்பதியான கடவுளே நமது தந்தை என்றுதான் ஒவ்வொரு மதமும் சொல்லுகிறது.

மதத்தின் இந்த உயர்ந்த சித்தாந்தம் தான் இன்றைய விஞ்ஞான ஆராய்ச்சியின் முடிவாகவும் இருக்கிறது. மிகுந்த ஆராய்ச்சி செய்து சார்லஸ் டார்வின் எழுதிய 'இனங்களின் மூலம்' என்ற புத்தகத்தில், உலகத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடத்திலிருந்து எந்த ஓர் இனத்தின் ஆரம்ப உயிரும் தோன்றியிருக்க முடியாது என்று கூறுகிறார். இயற்கை நியதிகளின்படி, ஓர் இனம் தோன்றுவதற்குப் பல்வேறு சந்தர்ப்பங்கள் ஒன்று கூடியிருக்க வேண்டும். அப்படியானால், ஒரே இடத்தில் தான் தோன்றியிருக்க முடியும்.

டார்வின் சித்தாந்தப்படி மனிதன் உலகத்தின் பல பாகங்களில் தோன்றவில்லை, ஓர் இடத்தில்தான் இது நேர்ந்திருக்க முடியும். ஒரே வர்க்கத்தையும் இனத்தையும் சேர்ந்த உயிர்ப்பிராணிகளும், பொதுவான பெற்றோர்களின் வழியே தோன்றியவைதாம். ஆகையால் உலகத்தில் அவை இப்போது எந்தப் பாகத்தில் இருந்தாலும், ஒவ்வொரு தலைமுறையிலும் அவை ஓர் இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குப் போயிருக்க வேண்டும் என்பது டார்வின் முடிவு.

உயிர்ப்பிராணிகள் எல்லாவற்றையும் பற்றி டார்வின் சொன்னார். ஆனால் இன்னும் அதிக சிக்கல்கள் நிறைந்த சிருஷ்டியாகிய மனிதன் சம்பந்தப்பட்ட வரையில், ஓர்

இடத்தில் தான் அவன் தோன்றியிருக்க முடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே, டார்வின் சித்தாந்தப்படி உலகத்திலுள்ள எல்லா ஆண்களும் பெண்களும் ஒரே பெற்றோர் வழி வந்தவர்களே. மதத்தை நாம் நிராகரிப்பதாய் இருந்தாலும், விஞ்ஞானத்தை நாம் நிராகரிக்க முடியாது.

எவ்வளவோ பாதகமான சூழ்நிலைகளில் மனிதன் வாழ்க்கையை நடத்துவதற்காகப் பெரும் போராட்டத்தில் ஈடுபட வேண்டியிருந்தது. அந்தப் போராட்டத்தின் போது தான் நாகரிகம் உருவாகி வளர்ச்சி பெற்றது. ஆனால், மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக்கொள்ளும் கட்டத்துக்கு இப்போது வந்திருக்கிறோம். ஆகவே, நாகரிகத்தின் வளர்ச்சியைத் தடைப்படுத்தும் யுத்தத்தை ஒழிப்பதற்கு நல்ல மனிதர்கள் முயற்சி செய்கிறார்கள்.

—ராஜாஜி

உயர்வு, தாழ்வு மனப்பான்மை

படித்தவர்களுக்கும், உடல் உழைப்பைக்கொண்டு தொழில் செய்பவர்களுக்கு மிடையே வித்தியாசம் கற்பிக்கப்படுகிறது. இது மிகவும் துரதிர்ஷ்டமானது. சிலர் உயர்ந்தவர்கள் என்றும் சிலர் தாழ்ந்தவர்கள் என்றும் கருதுவது தவறு.

ஒரு தொழிலுக்குக் கௌரவம் ஏற்பட வேண்டுமானால், அதற்கு மூன்று அம்சங்கள் தேவை என்று கருதுகிறேன்.

முதலாவது:—ஒரு குறிப்பிட்ட வேலையை யார் செய்தாலும் சரி, அதைப் பற்றி அவர்களே உயர்வாகக் கருதிப் பெருமை கொள்ள வேண்டும்.

இரண்டாவது:—ஒவ்வொரு தொழிலுக்கும் அதைச் செய்யும் பொழுது, அதைத் தெரிவிக்கும் வகையில் ஒரு வெளிச் சின்னம் இருக்க வேண்டும். அது உடுப்பாக வழங்கப் படலாம். தொழில் செய்யும்பொழுது, டாக்டர்கள், வழக்கறிஞர்கள், அரசாங்க ஊழியர்கள் முதலியோருக்கு உடுப்புகள் ஏற்பட்டுள்ள மாதிரி, நகர சுத்தித் தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், தச்சு வேலைக்காரர்கள் முதலியவர்களும் தங்களுக்கென உடுப்புகள் அணிந்து கொள்ளலாம். சமூகத்தில் பழகும் பொழுது டாக்டர்கள், வழக்கறிஞர்கள் முதலியோர் சாதாரண உடை அணிந்து கொள்கிறார்கள். அதைப் போலவே சாதாரணத் தொழிலாளர்களும் அணிந்து கொள்ளலாம். அப்பொழுது இவர்களுக்கிடையே உள்ள வித்தியாசங்கள் போய்விடும்.

மூன்றாவது:-ஒவ்வொரு தொழிலிலும், அதில் ஈடுபட்டுள்ளவர்கள் தொழிலை விட்டுச் சென்றதும், சமூகத்தில் ஏனையோருடன் சேர்ந்து வசிக்கப் போதிய வருமானம் உள்ளதாகவும் இருக்க வேண்டும்.

கல்வியின் நோக்கமானது முதலில் கொஞ்சம் அறிவைப் புகட்ட வேண்டும். அது ஆத்ம நலனுக்கேயாகும். அது மட்டும் போதாது. வாழ்க்கையில் சம்பாதிப்பதற்கு வேண்டிய கல்வியைப் பெறவேண்டும். அறிவும் கலாசாரமும் மட்டும் நமது தேவைகளை எல்லாம் பூர்த்தி செய்துவிட முடியாது. பொருளாதார வசதிக்கும் வகை செய்ய வேண்டும்.

—ஸ்ரீ பிரகாசா

மாணவர் கட்டுப்பாடின்மை

மாணவர்களிடையே உள்ள ஏமாற்றமும் மனச் சோர்வுமே கட்டுப்பாடின்மைக்குக் காரணம் என்று சிலர்

சொல்லுகிறார்கள். மாணவர்கள் தங்களை மட்டமானவர்கள் என்று நினைத்துக்கொண்டால்தான் சோர்வடைய வேண்டும். இந்திய மாணவர்கள் மட்டமானவர்கள் அல்ல. சுதந்தரம் கிடைத்தபின்னரும் மாணவர்கள் ஏக்கம் அல்லது ஏமாற்ற உணர்ச்சிக்கு இடந் தருவார்களானால் அவர்களது சிந்தனையில் ஏதோ கோளாறு இருப்பதாகவே அர்த்தம். அவர்கள் எவ்வளவு விரைவில் அந்தச் சிந்தனைக் கோளாற்றை விட்டொழிக்கிறார்களோ அவ்வளவுக்கு நலம்.

தன்னடக்கம், நன்மை தீமைகளைப் பகுத்தறியும் ஆற்றல், இவ்விரண்டையும் பொறுத்தே கட்டுப்பாடு இருக்கிறது. முழு உற்சாகத்துடனும், பக்தியுடனும், அறிவை விருத்தி செய்து கடமையைச் செவ்வனே செய்வதற்குக் கற்றுக்கொள்வது மாணவர்களின் முதல் வேலை.

மாணவர்கள் கட்டுப்பாடின்மையில் இறங்குவதைக் கேட்க மனம் வருந்துகிறது. பொறுப்பற்ற முறையில் மாணவர்கள் நடந்துகொண்டால் இந்தியாவின் எதிர் காலத்தை அவர்களிடம் எப்படி ஒப்புவிக்க முடியும்?

— பண்டித கோவிந்த வல்லப பந்த்.

அணுசக்தி ஆயுதங்கள்

அமெரிக்கா இன்னும் அணுசக்தி ஆயுதங்களைக் கைவிடவில்லையே என்பதுதான் எனது விருத்தாப்பிய காலத்தில் எனக்கு வேதனை தரும் விஷயம். அணுசக்தி ஆயுதங்களை உபயோகித்தால் நாகரிகமே அழிந்துபோய் விடும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆயினும் வல்லரசுகள் இந்த ஆயுதங்களைக் கைவிடவில்லை. இந்த ஆயுத உற்பத்தியின் ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பல பெரிய விஞ்ஞானிகள் அதன் விளைவுகளைக் குறித்துக் கவலை தெரிவித்திருக்கிறார்கள். மனித வர்க்கத்தின்

தலைவிதி என்னவாயிருக்கப் போகிறது என்பதை இது காட்டுகிறதோ என்று கூட எனக்குத் தோன்றுகிறது.

அணுசக்தி ஆயுதங்களைக் கைவிடுவதில் அமெரிக்கா தானாகவே தனிப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று, சிறிது காலத்துக்கு முன்பு 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் எழுதினேன்.

பிறர் என்ன செய்கிறார்கள் என்று எதிர்பாராமல் தாமாகவே காரியங்களைச் செய்வதுதான் சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்கும் ராஜபாட்டையாகும். தைரியம்தான் அதற்கு வழிகாட்டும் விளக்கு.

கைகுலுக்குவதற்காக இரண்டு பேர் ஓரிடத்திற்கு வருகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். மற்றவன் தன் கைக்குள் விஷத்தை வைத்துக்கொண்டிருக்கிறான் என்று பரஸ்பரம் சந்தேகப்பட ஆரம்பித்தால் என்ன ஆகும்? இருவரும் மணிக் கணக்கில் அப்படியே நின்று கொண்டிருக்கலாம். இருவரில் பலசாலியாகவும் தைரிய சாலியாகவும் இருப்பவர் தானே முதலில் தன் கையை நீட்ட வேண்டும்?

'அமெரிக்கா அணுசக்தி ஆயுதங்களைக் கைவிட்டால் கம்யூனிஸ்டு நாடுகள் அணுசக்தி ஆயுதங்களைப் பிரயோகிக்காமல் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது' என்று கானடா, பிரிட்டன், அமெரிக்கா இன்னும் இதர நாடுகளில் உள்ள நண்பர்கள் கேட்கிறார்கள். அதற்கு உத்தரவாதம் இல்லை; உத்தரவாதம் இருக்கவும் முடியாது. கம்யூனிஸ்டு நாடுகளும் அதே மாதிரி பயப்படலாம். அம்மாதிரி பரஸ்பர பயத்துக்கு முடிவே கிடையாது. தீமை, மோசடி பலாத்காரம் ஆகியவற்றை நிச்சயமாகத் தடுப்பதற்கு எந்த வழியும்

இல்லை. பதிலுக்குப் பதில் பலாத்கார நடவடிக்கைகளுக்குத் தயார் செய்வது கொடுமையை அதிகரித்து நீடிக்கத்தான் செய்யும்.

நாமே தனிப்பட்டு சரியான காரியங்களைச் செய்வதைப் பற்றித்தான் குறிப்பிடுகிறேன்; அணு சக்தி ஆயுதங்களைப் பற்றி அல்ல. யார் இந்தக் கொள்கையை உணர்ந்து சீக்கிரமாக அனுஷ்டிப்பார்கள் என்று எதிர்பார்த்தோமோ அங்கு அது இன்னும் ஆரம்பமாகவில்லை.

சென்ற சில மாதங்களில் பல பிரச்னைகளில் தனிப்பட்டு காரியங்கள் செய்வது என்ற கொள்கையை ருஷ்யா வெகு துரிதமாகக் கையாள ஆரம்பித்துவிட்டது.

இதன் காரணம் என்னவாயிருக்கக் கூடும் என்று தேடி, அதற்குத் தவருன சமாதானம் கண்டுபிடிக்கக் கூடும். ருஷ்யாவுக்கு விஷயம் விளங்கிவிட்டது; அதன் பயன் தெரிந்துவிட்டது என்பதுதான் உண்மை விஷயம். காரணம் எதுவாயிருந்தால் என்ன? ருஷ்யா நிதானமாகப் போக உறுதி கொண்டிருக்கிறது.

நாமே தனிப்பட்டு நடவடிக்கை எடுப்பது என்ற இன்னும் சிறந்த வெடிகுண்டை தயாரிக்கும் விஷயத்தில் இப்போதாவது அமெரிக்காவும் பிரிட்டனும் நடவடிக்கை எடுத்துக்கொண்டால் அதில் ஒன்றும் அவமானமில்லை. தார்மிக சக்தி என்பது வெறும் சொற்ருெடர் அல்ல. அது பிரத்யட்ச உண்மை. சண்டை போடுவதற்கு ஆளில்லை என்ருல் வெடிகுண்டுகளுக்கு உண்மையான மதிப்பு ஒன்றும் கிடையாது, அதற்கு மாருக தற்கொலைக்கு ஒப்பான செலவுதான் கண்ட பலஞக இருக்கும்.

நாம் பிறரால் ஆளப்படுவதை அனுமதிக்க மாட்டோம் என்று உறுதி கொண்டுவிட்ட மக்களை மற்ருெரு நாடு இனி ஆளுவது சாத்தியமில்லை என்பதை

காந்தியடிகள் நிரூபித்துவிட்டார். இனி எவரும் அந்தப் பரீட்சையில் இறங்கப் போவதில்லை. ஆகவே இந்த அச்சத்தை மனத்தில் வைத்துக்கொண்டு பெரும் அளவு ஆயுதங்களைச் செய்து குவிப்பது உள்ள வசதிகளை வீணாக்குவதாகும்.

உலக சரித்திரத்திலேயே ஒரு கோரமான யுத்தத்தில் வென்று புகழ், சக்தி இவற்றின் உச்சியை அடைந்திருக்கும் அமெரிக்காவுக்குப் பந்தோபஸ்து பற்றிக் கிலி பிடித்திருப்பதும், சமாதானம், அமைதிக்காக மகா கோரமான ஓர் அசுரனை அமெரிக்கா கட்டித் தழுவிக் கொள்வதும் பரிதாபமல்லவா? முதலில் நாகரிகத்தையே அழித்துவிடக்கூடியதும், உபயோகித்தால் மனிதப் பூண்டையே வேரறுக்கக் கூடியதுமான ஆயுதங்களை, அமெரிக்கா தன்னை அறியாமலே செம்மைப்படுத்தி விட்டது. உலகத்துக்கு இதைவிடப் பெரிய கெடுதல் இருக்க முடியாது.

இந்த ஆயுதங்கள் உபயோகிக்கப்படுவதற்கல்ல வென்றும், எதிரி தவருக நடந்துகொள்ளாமல் அச்சுறுத்துவதற்கே என்றும் சொல்லுகிருர்கள். இதற்கிடையில் மனிதனின் மன அமைதி குலைந்து விடுகிறது. இதனுல் உண்மையான முன்னேற்றமும் தடைப்படுகிறது. பலம் பொருந்தின வல்லரசுகள் தங்களுக்கே பாதகம் விளைவித்துக்கொள்வதோடு நடுநிலைமை நாடுகளின் உரிமைகளையும் மீறுகின்றன.

'இவற்றையெல்லாம் ருஷ்யாவிடம் சொல்லுங்கள். எதிரி தனது அனுகூலமான நிலையை விட்டுக்கொடுக்க மாட்டான் என்று எங்களுக்குத் தெரிந்திருக்கும்பொழுது உங்கள் யோசனையை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்?' என்று என்னை பதிலுக்குக் கேட்கிருர்கள். அதாவது

இரண்டு பேரும் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்கிறார்கள். நான் சொல்லும் தனிப்பட்ட நடவடிக்கை என்ற கொள்கைக்கு இது முரண் ஆகும். இந்தத் தீமையை அகற்றி விடுவதற்கு நடவடிக்கை எடுக்கத் தயாராய் இருந்தாலொழிய இந்த விஷயத்தில் எதையும் சாதிக்க முடியாது.

—ராஜாஜி

ருஷ்யா, தனியாக அணுசக்தி ஆயுதங்களை எறிந்து விட ஒப்புக்கொள்ள வில்லை என்பது உண்மையே. எல்லா அணுசக்தி ஆயுதங்களையும் உலகம் முழுவதிலும் தடை செய்வதற்கு ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்று ருஷ்யா அடிக்கடி கூறி வருகிறது. 'உங்களை நாங்கள் நம்ப முடியாது, ஆகையால் சர்வதேசத் தடைக்கு நாங்கள் சம்மதிக்க முடியாது. நாங்கள் அணுசக்தி ஆயுதங்களை விட முடியாது. ஏனெனில், அப்படி விட்ட பிறகு, எங்களை விட நீங்கள் பலமற்றவர்களாக இருக்க மாட்டீர்கள்' என்று மேற்கு நாடுகள் பதில் அளித்தன.

சமீபத்தில் ருஷ்யா எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளைப் பற்றி, பிரிட்டிஷ் அமெரிக்கப் பத்திரிகைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அபிப்பிராயங்களைப் போல, அவ்வளவு சோர்வளிக்கும் எதையும் என் வாழ்நாளிலேயே வாசித்ததில்லை. ஏற்கனவே முகம் கடுகடுப்பாய் இருந்த பொழுது, அது பிடிக்கவில்லை என்றார்கள். இப்பொழுது புன்முறுவல் பூத்தால், அதைச் சந்தேகிக்கிறார்கள்; கேலி செய்கிறார்கள். உணர்ச்சியே இல்லாத சிலை போன்ற முகம் தான் இனி பாக்கி; அது எப்பொழுதுமே பிடிக்காது.

விரோதத்திலிருந்து சிநேகத்துக்கு மாறும்பொழுது காட்டப்படும் குறிப்புகள், பலமின்மையைக் காட்டும்

அறிகுறி என்று வியாக்கியானம் செய்யலாம். ஆனால் அது சரியல்ல; விவேகமானதும் அல்ல. கேலி செய்தும் துச்சமாக உதறித்தள்ளியும் எந்த நல்ல காரியத்தையும் முளையிலேயே கிள்ளுவது சரியல்ல.

அணுசக்தி ஆயுதங்களைத் தடை செய்ய வேண்டு மென்ற கோரிக்கையை அநேகமாக எல்லா விஞ்ஞானி களும் ஆதரிக்கிறார்கள். அவர்களுக்குப் புத்தியில்லை என்றோ, தேசபக்தி இல்லை என்றோ சொல்லுவது தவ றாகும்.

உலக சமாதானப் பிரச்னையில் இன்னும் பல விஷ யங்கள் இருக்கின்றன என்பதை நன்கறிவேன். ஜெர் மனி ஐக்கியம், சீனாவின் பார்மோஸா கோரிக்கை, ஆயுத பலத்துடன் கம்யூனிஸ்டுகள் கொஞ்சம் கொஞ்சமாக தென்கடல்களை நோக்கி விஸ்தரிப்பது முதலிய விஷயங் கள் இருக்கின்றன. ஆனால் நான் வேண்டுமென்றே ஒரே ஒரு விஷயத்தைப்பற்றி மட்டும் குறிப்பிட்டேன். ஏனெனில், வாழ்க்கை, நாகரிகம் ஆகியவைகளின் அடிப் படைகளையே அது பாதிப்பதாக இருக்கிறது. அத்துடன் அதில் தாமதம் செய்வதற்கு இடமில்லை.

மேற்கு நாடுகளில் உள்ளவர்களின் நண்பன் என்ற முறையில் இக்கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். முன்னேற்றத்துக்குச் சமாதானம் இன்றியமையாதது. உலக மக்கள் சமாதானத்தைப் பெற ஆண்டவன் அருள் புரிவாராக.

—ராஜாஜி

பெண்கள் ஆட்சி

பெண்கள் தான் ஆண்களை ஆட்சி செய்கிறார்கள் என்பதைத் தெனாலிராமன் கதை மூலம் உங்களுக்கு

ஞாபகமூட்ட விரும்புகிறேன். ஒரு நாள் அரசன், எவ்வாறு பெண்கள் சொல்லுகிறபடி ஆண்கள் நடக்கிருர்கள் என்பதை நிரூபிக்குமாறு தென்னுலிராமனைக் கேட்டான். அதற்கு சிவப்பு, வெள்ளை, கறுப்பு முதலிய வெவ்வேறு நிறமுள்ள மூன்று குதிரைகளைக் கொண்டுவருமாறு தென்னுலிராமன் கூறினன். அவ்வாறே கொண்டுவரப் பட்டன. அரசனுடன் தென்னுலிராமன் மூன்று குதிரைகளையும் அழைத்துக்கொண்டு, ஒரு வீட்டின் முன்னுல் நின்று அவ் வீட்டிலுள்ளவர்களைக் கூப்பிட்டு 'உங்களுக்கு எந்தக் குதிரை வேண்டும்' என்று கேட்டான். முதலில் வெள்ளைக் குதிரை வேண்டுமென புருஷன் கேட்டான். சற்று நேரத்துக்குள் மனைவி 'சிவப்புக் குதிரை நன்ருக இருக்கிறது; அதுவே வேண்டும்' என்று சொல்ல, புருஷன் வெள்ளைக் குதிரையை விட்டுவிட்டு சிவப்புக் குதிரை வேண்டும் என்று கேட்டான். இதன் மூலம் பெண்களே ஆட்சி புரிகிருர்கள் என்பதைத் தென்னுலி ராமன் அரசனுக்கு நேரில் காட்டினன்.

பெண்களைப் படிக்க வைப்பது தேசத்தையே படிக்க வைப்பதாகும். ஆண்கள் வேலையைப் பெரும்பாலும் பெண்கள் இப்பொழுது செய்கிருர்கள். சமையல் சாஸ்திரத்தைப் பெண்கள் நன்ருக அறிய வேண்டும். இக் காலத்தில் பெண்களுக்கு சமைக்கக் கூடத் தெரியவில்லை.

—ஜே. ஸி. குமரப்பா

**பூதானம்**

செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் நிலம் அளிக்க முன் வருவதைக் காண்கிறேன். எங்கும் உணர்ச்சியும் பக்தியும் தோன்றியிருக்கின்றன. மக்கள் பூமிதானத்தில் தமக்கு நன்மை உண்டு என்று எண்ணுகிருர்கள். ஆனுல் ஒரு புறத்தில் மெத்தப் படித்தவர்கள், இந்த இயக்கத்தினுல் எந்த அளவுக்கு நன்மை ஏற்படும் என்று தர்க்கம்

செய்து கொண்டிருக்கிறார்கள். இயக்கம் வெற்றியுடன் பூர்த்தியான பிறகும், இவர்கள் தமது விவாதங்களைத் தொடர்ந்து நடத்திக் கொண்டேதான் இருப்பார்கள்; இதற்கு ஒரு முடிவே ஏற்படாது. ஆனால், இந்தப் படித்தவர்கள் சிரமத்தைப் பாராமல் எங்களுடன் ஒரு வாரம் அல்லது பத்து நாள் சுற்றி மக்களுடைய மனம் எப்படி இயங்குகிறது, அது எவ்வாறு மேம்பாடு எய்துகிறது என்பதைத் தம் கண்களால் பார்ப்பார்களானால் எல்லோருக்கும் நன்மை உண்டு.

—ஆசார்ய விநோபா பாவே

# செய்திக் கோவை

## இஸ்ரேலுக்கு ஆயுதங்கள்

"இஸ்ரேலுக்கு மிகுந்த ராணுவ பலம் இருப்பதை நன்கு உணர்ந்தும், அந்த நாட்டுக்கு அமெரிக்கா மென் மேலும் ராணுவ தளவாடங்களையும் இதர ராணுவ உதவி களையும் அளித்து வருகிறது. அதாவது அரபு நாடுகளை விட, இஸ்ரேலுக்கு ராணுவ பலம் அதிகமாய் இருக்க வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் தான் அமெரிக்கா இவ்வாறு செய்கிறது. இஸ்ரேலுக்கு மேலும் ராணுவ உதவி அளிக்காமலிருக்குமாறு எச்சரிக்கிறேன்" என்று எகிப்து பிரதமர் கர்னல் நாஸர் கூறினர்.

## இலங்கையில் தமிழ் ராஜ்யம்?

"இலங்கையில் சிங்களத்தை மட்டுமே ஆட்சி மொழியாக்க சிங்களவர்கள் உறுதி கொண்டிருக்கிறார்கள். பௌத்த சந்நியாசிகளே சிங்கள ராஜ்யத்தை ஸ்தாபிக் கத் துடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே தமிழரும் தனிராஜ்யம் கோருவதைத் தவிர வேறு வழியில்லை. அவ்வாறு ஏற்படும் தமிழ் ராஜ்யம், பாக்கி இலங்கை யுடன் சம அந்தஸ்தில் சமஷ்டி ஏற்பாட்டில் சேரலாம். எந்த நாகரிக மக்களும் கஷ்டப்படாமல் தமது சுதந்திரத் தையும் சுயமரியாதையையும் பாதுகாத்துக் கொண்ட தில்லை. ஆகவே இலங்கைத் தமிழர்கள் தமது லட்சி யத்தை அடைவதற்கு எத்தகைய கஷ்டங்களையும் ஏற் றுக்கொள்ளத் தயாராக இருக்கிறார்கள்" என்று ஸ்ரீ சுந்தர லிங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.

சிங்களத்துடன் தமிழும் சம அந்தஸ்தில் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற கொள்கை மீது மறு தேர் தலுக்கு நின்று வெற்றி பெறும் பொருட்டு ஸ்ரீ சுந்தர லிங்கம் வேண்டுமென்றே பார்லிமெண்டுக் கூட்டங்களுக் குப் போகாமலிருந்து தமது ஸ்தானத்தை இழந்திருக் கிருர்.

ஹைட்ரஜன் குண்டு

இதுவரை நடந்துள்ள ஹைட்ரஜன் குண்டு சோதனைகளில், மிகப் பெரிது என்று ருஷ்யப் பத்திரிகை களால் வர்ணிக்கப்பெற்றுள்ள ருஷ்ய சோதனையின் அபாயமான விளைவுகளைக் குறித்து ஜப்பானியர்கள் கவலை கொண்டிருக்கிருர்கள். கதிரியக்க மழை கீழே விழாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்தச் சோதனை மிக உயரத்திலிருந்து செய்யப்பட்டது என்று ருஷ்ய அதிகாரிகள் கூறிய போதிலும், ஜப்பானிலும் ஜெர்மனியிலும் கதிரியக்க மழை விழுந்திருக்கிறது.

ஜப்பான் நாட்டின் தென் பகுதிகளில் விழுந்த கதிரி யக்க மழையின் அளவு, நிமிஷத்துக்கு இருபத்தெட் டாயிரம் எண் என்று வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவித்தது. நிமிஷத்துக்கு நூறு எண்களுக்கு மேலே இருந்தாலே மனித உயிர்களுக்கு ஆபத்து என்று ஜப் பானிய அரசாங்கம் கூறுகிறது. ஆகவே இந்த ருஷ்ய சோதனையினல் நிமிஷத்துக்கு இருபத்தெட்டாயிரம் எண் அளவு மழை விழுந்திருப்பது ஜப்பானியருக்குப் பெரும் கவலையை உண்டாக்கியிருக்கிறது.

எதியோப்பியாவில்

எதியோப்பிய மன்னர் ஆட்சியின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சமீபத்தில் நடைபெற்றது. இதன்

ஞாபகார்த்தமாக எதியோப்பியாவின் தலைநகரான அடிஸ் அபாபாவிலுள்ள இந்திய சமூகத்தினர் 'மகாத்மா காந்தி வைத்தியசாலை' என்ற புதிய வைத்தியசாலையைக் கட்டி முடித்தனர். இதற்கான செலவு முழுவதையும் எதி யோப்பியாவில் உள்ள இந்தியர் சமூகம் ஏற்றுக்கொண் டது. இந்திய, எதியோப்பியப் பெண்களின் பிரசவ வசதிக்காகவே இந்த வைத்தியசாலையைக் கட்டினர்.

### ஐந்து நகரங்களில் ஒரே தினசரி

அமெரிக்காவில் நியூயார்க் நகரிலுள்ள 'வால்ஸ் டிரீட் ஜர்னல்' என்னும் பிரபலமான பத்திரிகை தற் பொழுது அமெரிக்காவில் உள்ள ஐந்து நகரங்களில் ஒரே சமயத்தில் அச்சாகி வெளியாகிறது.

நியூயார்க்கில் பத்திரிகையை எப்படி அமைக்கிறார் களோ அதை அப்படியே மற்ற இடங்களுக்குத் தந்தியில் அனுப்புவதற்கான பிரத்தியேக இயந்திரம் ஒன்றிருக் கிறது. நியூயார்க்கிலுள்ள 'தந்தி—அச்சு யந்திரசாலி கள்' டைப் அடிப்பதுபோலத் தட்டுவார்கள். அதே சமயத்தில் ஆயிரக்கணக்கான மைலுக்கு அப்பாலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ, டல்லஸ், சிகாகோ முதலிய நகரங் களிலும், தலைநகரான வாஷிங்டனிலும் இந்தத் தினசரி காரியாலயத்தில் உள்ள விசைக் கருவிகளில் அச்சுக் கோப்பு தனிக் காகித நாடாவில் வரும் அவற்றை இயந் திரங்களில் இணைத்து விடுவார்கள். அந்த இயந்திரங்கள் பத்திரிகைகளை லட்சக் கணக்கில் அச்சடித்து விடும்.

ஆயிரக்கணக்கான மைல் தூரத்திலுள்ள நகரங் களில், அதே செய்திகளுடன், எந்தவித மாற்றமும் இல்லாமல் ஒரு தினசரி அச்சிடப் பெறுவது, அமெரிக் காவிலேயே இதுவே முதல் தடவையாகும்.

டல்லஸ்—குன்ஹா அறிக்கை

அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸூம், போர்த்துக்கல் வெளிநாட்டு மந்திரி குன்ஹாவும் வாஷிங்டன் நகரத்திலிருந்து ஒரு கூட்டறிக்கை விடுத்துள்ளனர். அதில் போர்த்துக்கல் நாட்டையும் அதன் கீழ்க் கோடியிலுள்ள போர்த்துக்கீசிய மாகாணங்களையும் டல்லஸ் அங்கீகரித்திருக்கிறார். கோவாவை ஒரு போர்த்துக்கீசிய மாகாணம் என்று போர்த்துக்கல் சொல்லிவருகிறது. இந்த அறிக்கை இந்தியாவில் பெரும் அதிருப்தியை உண்டாக்கியிருக்கிறது. சில தினங்களுக்கு முன்தான், இந்தியாவிலுள்ள அமெரிக்கத் தூதர் ஸ்ரீ ஷெர்மன் கூப்பர், கோவா விஷயத்தில் அமெரிக்கா தலையிடாது என்றும், ஏகாதிபத்திய ஆட்சியை அமெரிக்கா ஆதரிக்கவில்லை என்றும் கூறினர். டல்லஸ் அறிக்கையை விளக்கப்படுத்திக் கூறுமாறு இந்திய அரசாங்கம் அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறது.

அட்லி ராஜிநாமா

பிரிட்டனில் உள்ள, பார்லிமெண்டு தொழிற்கட்சித் தலைவர் ஸ்ரீ அட்லி தமது பதவியை ராஜிநாமா செய்தார். ஸ்ரீ அட்லிக்கு இப்பொழுது வயது எழுபத்திரண்டு. சென்ற இருபது ஆண்டுகளாக அவர் பார்லிமெண்டு தொழிற்கட்சியின் தலைவராகப் பணியாற்றியிருக்கிருர். 1945-ஆம் ஆண்டு முதல் 1951-ஆம் ஆண்டு வரை பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்தார். ஸ்ரீ அட்லிக்கு 'பிரபு' பட்டம் வழங்கப்பெற்றிருக்கிறது. இனி அவர் லார்டு சபையில் அங்கம் வகிப்பார்.

காந்தியடிகளைப் பின்பற்று

"தாய்லாந்தின் அரசியல்வாதிகள் காந்தியடிகளின் சீரிய உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். அஹிம்சை

யையும் சாத்வீக எதிர்ப்பையும் ஆயுதங்களாகக் கொண்டு இந்திய நாட்டை அந்நியர்களிடமிருந்து விடுவித்த உதாரண புருஷர் காந்தியடிகள்" என்று தாய்லாந்தின் பிரதம மந்திரி விபுல சங்கிராம் கூறினர்.

பிரிட்டிஷ் பத்திரிகைகளின் நூறு வருஷச் சேவை

பிரிட்டனிலுள்ள பல தினசரிகள் நூறு பிராயமுடையவை. இவற்றில் பல, மாவட்டத் தலை நகரங்களிலிருந்து வெளி வருகின்றன என்ருலும் புகழ்பெற்றவை. உள்ளூர்ப் பிரச்னைகளை தேசீய நோக்குடன் அலசித் தொண்டாற்றுபவை. பல தினசரிகள் கடல்கடந்து சென்று கீர்த்தி பெற்றுள. வாழ்க்கையின் ஒவ்வோர் அம்சத்திலும் தினசரிப் பத்திரிகைகளுக்குத் தொடர்புண்டு. தொழில், கலாசாரம், சுகாதாரம், கல்வி, பொழுது போக்கு என பலப்பல பொருள்களை எடுத்தாளும் வாய்ப்பு தினசரிகளுக்கு உண்டு. அதனுல்தான் அவை செல்வாக்குப் பெற்று வளர முடிகிறது.

லண்டன் நகரத்திற்கு வெளியே தினசரிப் பத்திரிகைகளை நடத்தும் வாய்ப்பு சுமார் நூருண்டுகளுக்கு முன்புதான் கிடைத்தது. பத்திரிகைச் செய்திகளைச் கட்டுப்படுத்த வேண்டுமென்று 1712இல் ஆன் மகாராணி காமன்ஸ் சபையைக் கேட்டுக்கொண்டார். வீண்வதந்திகளையும் அபவாதங்களையும், பத்திரிகைகள் வெளியிட்டுப் பொது வாழ்வுக்குப் பங்கம் விளைவிப்பதைத் தடுக்கவேண்டும் என்று சர்க்கார் கருதிற்று. தபால் கட்டணம் உயர்த்தப்பட்டது. பிறகு பல ஆண்டுகள் வரையில் இந்தக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டது. சர்க்காருக்கு வருமானம் கிடைப்பதால் பத்திரிகைத் தபால் கட்டணம் குறைக்கப்பட முடியாதென்று வாதிக்கப்பட்டது. கண்காணிப்பு நோக்கதுடன்தான், சர்க்கார், கட்டணத்தைக் குறைக்காமல் இருந்தது என்பது ஊரறிந்த விஷயம்.

பத்தொன்பதாம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மக்களுடைய மனநிலை மாறிற்று. பத்திரிகைச் சுதந்தரம் அவசியம், அது ஜீவாதார உரிமை, என்று பலர் கருதலானுர்கள்; 1855ஆம் ஆண்டில் தபால் வரியும், விளம்பரவரியும் ரத்தாயிற்று.காகிதவரிமட்டும் அமலிலிருந்தது; இதுவும் 1861-இல் ரத்தாயிற்று. வரிகள் ரத்தானதால் மிகவும் மலிவாக-ஒரு சுமார் ஓர் அணு விலையில் - பத்திரிகைகளை விற்பது சாத்தியமாயிற்று.

மாவட்டத் தலைநகரங்களிலிருந்து வெளிவரும் ஸ்காட்ச்மன், மான்செஸ்டர் கார்டியன் போன்ற வார இதழ்கள் தினசரிகளாக மாற்றப்பட்டன. வரிச்சுமை குறைந்ததால் லண்டனிலிருந்து வெளியிடப்படும் டெய்லி டெலகிராப் ஒரு பென்னி விலையில் விற்கப்பட்டது. 1827-இல் பெர்மிங்ஹாம் போஸ்டு தோன்றியது.

1864-ஆம் வருஷத்தில் பிரிட்டனில் 612 பத்திரிகைகள் இருந்தன. 1895-இல் இவற்றின் எண்ணிக்கை 2,304 ஆக உயர்ந்தது. பொருளாதாரப் பிரச்னைகள் போன்ற காரணங்களால், பிற்காலத்தில் சில பத்திரிகைகள் மறைந்தன. இப்போது பிரிட்டனில் 1,548 பத்திரிகைகள் உண்டு.

பத்திரிகைகளின் பக்கங்கள் அதிகமாகவில்லை என்றுலும் சந்தா பெருகி வந்தது. தினசரிகளைப் படிப்போர் எண்ணிக்கையும் பெருகிற்று. காலை, மாலை வெளியீடுகள் வந்தன. 1937 இல் சுமார் 17,600,000 பிரதிகள் விற்பனையாயின, 1952இல் தினசரிப் பத்திரிகைகளின் விற்பனை அதிகரித்தது. ஏறக்குறைய 30,000,000 பிரதிகள் தினந்தோறும் விற்பனையாயின. இப்போதும் இதே எண்ணிக்கை விற்பனை இருந்து வருகிறது. இவற்றில், லண்டனுக்கு வெளியேயுள்ள மாவட்ட அரசியல் தினசரிகளின் எண்ணிக்கை 3,100,000 ஆகும்.

மாவட்ட நகரங்களிலிருந்து வெளிவரும் மாலைப் பத்திரிகைகள் அரசியல் செல்வாக்குள்ளவை எனச் சொல்வதற்கில்லை. அவை செய்தித் தாள்கள்தான். 1937இல் இவற்றின் விற்பனை எண்ணிக்கை 4,400,000. இப்போது சுமார் 7,200,000 பிரதிகள் விற்பனையாகின்றன. காலைத் தினசரிகள் உள்ளூர்ப் பிரச்னைகளுக்கு முக்யத்வம் கொடுக்கின்றன. மாவட்ட தினசரிகளுக்குச் சில கடமைகளும் பொறுப்புக்களும் உண்டு. "பாரபட்சமில்லாமல் செய்திகளை சேகரித்துத் தரவேண்டும். உண்மையைத் திரித்துக் கூறக்கூடாது, நேர்மை தவறக்கூடாது. ஏக போக உரிமைக்கு அடிமையாகக் கூடாது. விமரிசனத்தில் நெறி தவறக்கூடாது. பிரசாரத்தின் பெயரால், நிதானம் தவறக்கூடாது. எதிரிகளின் பேச்சுக்கு மதிப்புக்கொடுத்து அரசியல் விமர்சனம் செய்யவேண்டும். குறைபாடுகள் ஏற்படலாம்; அவற்றைத் திருத்திக் கொள்ளலாம். கண்ணியக் குறைவாக எழுதக்கூடாது. எழுத்தில் வலிமை வேண்டும். வாய்மை வேண்டும். என்று பல ஆண்டுகளுக்கு முன்பு, மான்செஸ்டர் கார்டியனின் ஆசிரியராக இருந்த ஸி. பி. ஸ்காட் கூறினார். எழுத்துலகில் அவர் கீர்த்தி மங்காது பிரகாசிக்கிறது." அவருடைய நல்வாக்கை பிரிட்டிஷ் தினசரிகள் கடைப்பிடித்து வருகின்றன. பிரிட்டனிலுள்ள மாவட்டப் பத்திரிகைகளின் அரசியற் கருத்துக்களுக்கு வெளிநாடுகளில் மதிப்பு அதிகம் என்பதும் பெருமைதரும் செய்தி.

பிரிட்டனில் வானிலை ஆராய்ச்சி

பிரிட்டனில் வானிலை ஆராய்ச்சி இலாகா ஏற்பட்டு இம்மாதத்துடன் நூறு ஆண்டுகளாகின்றன. இன்று, இந்தத் துறையில் பிரிட்டன்தான் உலக நாடுகளில் முன்னணியில் நிற்கிறது. வானிலைத் தகவல்களைத்

தொகுப்பது நுட்பமான, சிக்கல் நிறைந்த வேலை. புயலைப்பற்றியும், காற்றின் திசை, வேகம் பற்றியும் தொலை தூரங்களுக்குத் தகவல் அனுப்பும் முறை, பிரிட்டனில், 1861 இல் ஆரம்பிக்கப்பட்டது. பிற நாடுகள் இதைப் பெரிதும் வரவேற்றன. பிரான்ஸ், ஜெர்மனி, ஹாலந்து, ருஷ்யா ஆகிய நாடுகள் இதைப் பின்பற்றி ஆராய்ச்சி நிலையங்களை அமைத்தன.

விமானப் போக்குவரத்து பிரபலமான பிறகுதான் வானிலைத் தகவல் இலாகாவின் முக்கியத்வம் அதிகமாயிற்று. விமான வேகம் அதிகமாக அதிகமாக, கால நிலை பற்றித் தெரிந்துகொள்வது அவசியமாயிற்று. வான மண்டலத்தில் வெவ்வேறு உயரத்திலுள்ள நிலை, காற்றின் வேகம், மேக சஞ்சாரம், புயல், சீதளக்காற்று இவற்றின் கதி எனப் பல தகவல்களைத் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

உலகம் முழுதும் பறக்கும் விமானங்களுக்குத் தகவல் தருவதற்காக, உலகின் பல பாகங்களிலுள்ள ஆயிரக் கணக்கான நிலையங்கள் தகவல்களைச் சேகரிக்கின்றன. இந்தச் செய்திகளை, லண்டனுக்கருகேயுள்ள டன்ஸ்டேபிளில் இருக்கும் மத்திய வானிலை ஆராய்ச்சி நிலையம் தொகுத்துச் சுருக்கி, விமானங்களுக்கும் உலகின் பலபாகங்களிலுள்ள தகவல் நிலையங்களுக்கும் அனுப்புகிறது. வானிலை ஹேஷ்யத்திற்குச் செய்தித் தொகுப்பு மட்டும் போதாது; நுட்பமான கணிதமும் ஊகமும் அவசியம். உதாரணமாக, பஸிபிக் கடலில் ஓரிடத்தில் புயல் உருவாவதாகத் தவல் கிடைக்கிறது. அதன் திசையையும் வேகத்தையும் கணக்கிட்டு, இன்ன இடத்தில், இன்ன வேகத்தில் வீசக்கூடும் என்று ஊகித்து, சம்பந்தப்பட்ட இடங்களை எச்சரிக்கவேண்டும். அமுக்கத்தினாலும் சூன்யத்தினாலும் புயலின் கதி மாறக்கூடும். மிகத்

துரிதமாகக் கணக்கிட்டால்தான் சம்பந்தப்பட்ட இடங் களுக்கு, உரிய, சமயத்தில், எச்சரிக்கை அனுப்ப முடியும், இப்போது இந்தக் கணிதத்திற்கு மின்சார யந்திரங்கள் (கம்பூடர்கள்) பயன்படுகின்றன.

கால நிலையைப்பற்றிச் சங்கேத மொழியில் தந்தி மூல மும் வானொலி மூலமும் அவ்வப்போது செய்திகள் அனுப்பப்படுகின்றன. சென்ற சில ஆண்டுகளாக, டன்ஸ்டேபிள் நிலையம் கால நிலையறிவிக்கும் வரைப் படத்தையே ரேடியோ புகைப்படக் கருவிமூலம் பல இடங்களுக்கு அனுப்புகிறது. தகவலை ஏற்கும் நிலையத்தி லுள்ள கருவி, இந்தப் புகைப்பட அலைகளை ஈர்த்து புகைப்படத் தாளில் அச்சிட்டு விடுகிறது.

வானிலைத் தகவல் அறிக்கை நிலையம் பல நாடு களுடனும் பல உப நிலையங்களுடனும் தொடர்புள்ளது. உதாரணமாக, டன்ஸ்டேபிள் நிலையத்திற்கு பிரிட்ட னில் மட்டுமே 180 தொடர்பு நிலையங்கள் உண்டு. வட அட்லாண்டிக் கடலின் கால நிலையைக் கூற அங்கங்கு கப்பல்கள் உண்டு. இவை தவிர வான மண்டலத்தின் நிலையறியவும் மேல்காற்றின் கதியைக் கணிக்கவும் அங்கங்கே விமானங்கள் பறந்து தகவல்களைச் சேகரிக் கின்றன.

வாயுமண்டலத்தில் அதியுயரத்திலுள்ள நிலையை அறிய ரேடியோ-ஸொண்டி பலூன்களை உபயோகிக் கிறார்கள். பலூனின் உதவியினால் மேலே பறக்கக்கூடிய இந்த யந்திரத்தில் உஷ்ண நிலை, ஈரப்பதம், காற்றின் அமுக்கம் இவற்றின் குறிப்பெடுத்து, ஒலி மூலம் சமிக்ஞை காட்டும் டிரான்ஸ்மிட்டர் பொருத்தப்பட்டிருக்கிறது. தரை மட்டத்திலிருந்து சுமார் பத்து மைல் உயரம் வரை வாயுமண்டலத்தின் அமுக்க இவை பயன்படுகின்றன.

இவற்றின் போக்கைக் கவனிக்க 'ரடார்' இயந்திரம் உபயோகிக்கப்படுகிறது. பிரிட்டனில் பல்வேறு இடங்களிலும், ஜிப்ரால்டர், மால்டா (ஏடன்) ஈராக், சைப்ரஸ், ஸ்பாக்லாந்து தீவுகள் ஆகிய இடங்களிலும் பிரிட்டனுடன் தொடர்புள்ள ரேடியோ-ஸொண்டி நிலையங்கள் இருக்கின்றன.

ரேடியோ-ஸொண்டி பலூன்களைச் சென்ற இருபதாண்டுகளாக உபயோகிக்கிறார்கள். அதை ரடாருடன் இணைத்துத் தானாகவே காலநிலைக் குறிப்பெடுக்கும்படி சமீபத்தில், பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் அமைத்தார்கள்.

புயல் உருவாகு மிடங்களையும் புயலின் கதியையும் துல்லியமாகக் கணித்துத் தகவல் வெளியிடும் வசதி பிரிட்டனில்தான் இருக்கிறது. ஆயிரம் மைலுக்கு அப்பால் வீசும் புயலை மோப்பம் பிடித்து, இன்ன திசையில் வீசக்கூடும் என்று ஹேஷ்யங் கூறும் கருவிகளும் உண்டு. வட ஆப்பிரிகாவிலோ, ஐஸ்லாந்துக்கரையிலோ, ருஷ்யாவிலோ வீசும் புயலைப்பற்றிய தகவல்களைப் பிரிட்டிஷ் நிலையம் சேகரித்து விடும்.

வானிலை ஆராய்ச்சி அரசியலுக்கு அப்பாற்பட்டது. தேசம், கொள்கை என்ற எல்லைகளுக்குள் கட்டுப்படாது செய்யும் சேவை அது. சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த அந்தச் சேவையில் பிரிட்டன் முன்னணியில் நிற்கிறது.

**கல்வி வளர்ச்சிக்குத் திரைப்பட உதவி**

தனிச் சிறப்புள்ள திரைப் படங்களைத் தயாரிப்பதில் எப்போதுமே பிரிட்டன் முன்னணியில் நிற்கிறது. 1951இல் பிரிட்டிஷ் பிலிம் தொழிலின் ஆதரவுடன் குழந்தைகளுக்காகத் திரைப்படம் தயாரிக்க 'சில்ரன்ஸ் பிலிம் பவுண்டேஷன்' ஸ்தாபிக்கப்பட்டது. இது லாப நோக்கமில்லாத ஸ்தாபனம். இதன் ஸ்தாபகர்கள்,

நீண்டகாலமாக இந்தத் துறையில் ஈடுபட்டவர்கள். சனிக்கிழமைகளிலும் 'மாடினி' காட்சிகளிலும் குழந்தைகளுக்கு அறிவு புகட்டும் பொழுதுபோக்குப் படங்களைக் காட்டுவதில் ஆர்தர் ராங்க் அக்கறை காட்டியதன் முடிவு தான் இந்த ஸ்தாபனம்.

முதல் யுத்த காலத்தில், படைவீரர்களுக்குப் பயிற்சி தர திரைப்படத்தை உபயோகித்த சில நாடுகளில் பிரிட்டனும் ஒன்ருகும். 1920க்குப் பிறகு, புரூஸ் உல்ப் போன்ற பிரமுகர்கள் கல்விப் படங்களில் அக்கறை காட்டினர்கள். 'இயற்கையின் ரகசியங்கள்' என்ற வரிசையில் துண்டுப் படங்கள் பல தயாராயின. இந்தத் துறையில் அக்கறை கொண்ட பள்ளி ஆசிரியர்கள், 'துண்டுப் படங்களை' வாடகைக்குப் பெற்று மாணவர்களுக்குக் காட்டினர்கள். கல்வித்துறையில் பிலிம் உபயோகிப்பதைப் பற்றி விசாரணை நடத்திய ஒரு குழு, 1921இல் சாதகமாகச் சிபாரிசு செய்தது. அதன் பிறகு பிலிம் தொழிலில் ஈடுபட்டவர்கள் இதில் கவனம் செலுத்தலானர்கள்.

1934இல் கல்வி, கலாசாரத் துறைகளில் கவனம் செலுத்துவதற்காக பிரிட்டிஷ் பிலிம் இன்ஸ்டிட்யூட் என்ற ஸ்தாபனம் அமைக்கப்பட்டது. அதே ஆண்டில் கல்விப்படங்களைத் தயாரிக்கவும், பள்ளிக்கூடங்களில் திரையிடவும் இரண்டு ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டன. இவை ஒன்றுடன் ஒன்று கூட்டுறவாக நின்று அற்புதமாகச் சேவைசெய்தன. இதனல் சிறந்த பொருளும் உத்திகளும் கையாண்டு கருத்துச் செறிவுள்ள படங்களைத் தயாரிக்க முடிந்தது.

சென்ற யுத்த காலத்தில் ராணுவப் பயிற்சியில் திரைப்படங்கள் முக்கிய இடம் பெற்றன. மக்களுக்குத்

தகவல் அறிவிக்கவும், நீதி போதிக்கவும் பிலிம் அவசிய மாயிற்று. திரைப்படங்களின் முக்கியத்தை உணர்ந்த அப்போதைய பிரதம மந்திரி சர்ச்சில், கல்வி ஸ்தாபனங்களுக்குத் தேவையான திரைப்படங்களைத் தயாரிக்க கல்வி இலாகா முனையவேண்டும் என்று (1943இல்) உத்திரவிட்டார். தர்சனக் கல்வி போதனைக் காக கல்வி இலாகா,எட்டுப் படங்களைத் தயாரிக்கத் திட்ட மிட்டது.

இந்தச் சமயத்தில், மக்களுக்கு அரசியல் தத்துவம் போதிக்க திரைப்படச் சாதனங்களை, சர்வாதிகார நாடு கள் உபயோகித்தன. அதன் விளைவுகளைக் கவனித்த பிரிட்டிஷ் அறிஞர்களும், ஆசிரியர்களும் கல்வித் துறையி லீடுபட்டவர்களும், சர்க்காரின் முயற்சியைக்கண்டு கவலை தெரிவித்தார்கள். கல்வி போதனையில் சுதந்திரம் அவசிய மென்பது அவர்களுடைய கருத்து. ஆசிரியர்களுடைய நலன்களைக் காக்கவும் தர்சனக் கல்வித்துறையில் ஆவன செய்யவும், தேசீய தர்சனக் கல்விக் கமிட்டியை, சர்க்கார் அமைத்தது. கல்வித்துறைப் படங்களைத் தயாரிக்க நிதி உதவியும், பள்ளிக்கூடங்களில் திரையிட வசதியும் அளித்து, கல்விப்படத் தயாரிப்பாளர்களுக்கு, சர்க்கார் ஊக்கமளித்தது. இதனால் அங்கு திரைப்படக் கருவூலங்கள் (பிலிம் லைப்ரேரி) ஏற்பட்டன. பள்ளிக் கூடங்களில் திரைப்பட அரங்குகள் அமைக்கப்பட்டன. புரொஜக்டர்களைக் கையாள, ஆசிரியர்கள் பயிற்சி பெற் றனர்.

துரதிருஷ்டவசமாக முன்னேற்றத்திற் கேற்றபடி, போதுமான அளவில் குழந்தைகளுக்கான படங்களும், கல்விப் படங்களும் தயாராகவில்லை. இருந்தாலும் கல்வி உபகரணமாக திரைப்படத்தை உபயோகித்து, பிரிட்டன்

வெற்றிபெற்று விட்டது. வேறு எந்த நாட்டிலுமே, பிலிம் தொழில், கல்வித் துறையில் இந்த அளவுக்குச் சேவை செய்யவில்லை.

### பத்து வருஷக் கடுங்காவல்

சென்ற ஜூலைமாதம் எண்பத்தெட்டு சத்தியாக்கிரகிகளுடன் கோவாவுக்குள் பிரவேசித்த இந்தியப் பார்லிமெண்டு அங்கத்தினர் ஸ்ரீ திரிதீப் சௌத்திரிக்கு, கோவாவிலுள்ள ராணுவ நீதி மன்றம் பத்து வருஷக் கடுங்காவல் தண்டனையும், பன்னிரண்டாயிரம் ரூபாய் அபராதமும் விதித்திருப்பதாகத் தெரிகிறது.

### ருஷ்யத் தலைவர்கள்

ருஷ்யப்பிரதம மந்திரி மார்ஷல் புல்கானின், ருஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் பிரதம காரியதரிசி குருசேவ் ஆகிய இருவரும் இந்தியாவுக்கு விஜயம் செய்து இரண்டு வராம் சுற்றுப் பிரயாணம் செய்தனர். டில்லி விமான நிலையத்தில் பிரதம மந்திரி நேரு இவர்களை வரவேற்ரூர். டில்லி நகரம் திருவிழாக் கோலத்துடன் விளங்கியது. பத்து லட்சம் மக்கள் வரவேற்பில் கலந்து கொண்டனர்.

பம்பாய், பூனு, பெங்களூர், சென்னை, கல்கத்தா, காஷ்மீர் முதலிய பல இடங்களுக்கும் ருஷ்யத் தலைவர்கள் விஜயம் செய்தனர். கல்கத்தா வரவேற்பில் கலந்து கொண்ட மக்களின் தொகை சுமார் முப்பது லட்சம்.

“உலகில் சமாதானம் நிலவச் செய்யவும் சமாதான சக்திகளைப் பலப்படுத்தவும் இந்தியா இடைவிடாமல் உழைத்து வந்திருக்கிறது. இந்த வகையில் இந்தியா எடுத்துக் கொண்ட முயற்சிகள் நல்ல பலனை அளித்திருக்கின்றன” என்று புல்கானின் கூறினர்.

பஞ்ச சீலக் கொள்கைகளை வலியுறுத்தி, ருஷ்யப் பிரதமரும் இந்தியப் பிரதமரும் கூட்டறிக்கை வெளியிட்டனர்.

ஒவ்வொரு இந்தியரும்

"ஒவ்வொரு இந்தியரும் மூன்று அல்லது நான்கு மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒருவருக்குத் தாய்மொழி நன்ருகத் தெரியவேண்டும். இந்தியையும் கற்றுக் கொள்ள வேண்டும். மற்ருெரு பிரதேசத்தின் மொழியான தமிழ், தெலுங்கு, அல்லது மலையாளத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். நான்காவதாக ஒரு அந்நிய மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டும். ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், சீனம் அல்லது ருஷ்ய மொழியைக் கற்றுக் கொள்ளலாம். குறைந்தது மூன்று அல்லது நான்கு மொழி தெரிந்தவர்களைத்தான் படித்தவராகக் கருதுவேன்" என்று நேரு கூறினர்.

லாலா லஜபதிராய்

"லாலா லஜபதிராய் இருபத்தேழு ஆண்டுகளுக்கு முன் உயிர் நீத்தார். சைமன் கமிஷன் வருகையை எதிர்த்தபோது போலீசாரின் தடியடிப் பிரயோகத்தில் காயமடைந்து மாண்டார். அவர் ஓர் உண்மைத் தியாகி. சுதந்திரப் போராட்டத்தை அந்த நாளில் தொடர்ந்து நடத்துவதற்கு அவர் ஓர் உதாரண புருஷராக விளங்கினர்" என்று நேரு கூறினர்.

இரண்டே வகுப்புக்கள்

ரயிலில் இரண்டே வகுப்புடன் நிறுத்திக் கொள்வதே இந்திய அரசாங்கத்தின் இறுதிக் கொள்கை என்றும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மூவாயிரம் மைலுக்குப் புதிய ரயில்பாதை போடத் திட்டமிட்டிருப்பதாகவும், ரயில்வே போர்டின் தலைவர் கூறினர்.

சவூதி அரேபிய மன்னர்

சவூதி அரேபிய மன்னர் சவூத் இபின் அப்துல் அஜீஸ் இந்தியாவுக்கு விஜயம் செய்து பதினேழு நாள் சுற்றுப் பிரயாணம் செய்தார். மன்னருடன் வந்த அதிகாரிகள் சுமார் இருநூறு பேர். இந்தியாவில் முஸ்லீம்கள் எவ்வித கஷ்டங்களுமின்றி நல்ல நிலைமையில் மற்றவர்களுடன் சமத்துவமாக இருப்பதாக பிரயாண முடிவில் ஓர் அறிக்கை வெளியிட்டார்.

சர்க்கரை உற்பத்தி

இந்தியாவில் சென்ற ஆண்டில் சர்க்கரை உற்பத்தி சுமார் பத்து லட்சம் டன். இந்த ஆண்டில் சர்க்கரை உற்பத்தி சுமார் பதினறு லட்சம் டன். இவ்வளவு அதிகமாக இதுவரை உற்பத்தி செய்ததே கிடையாது. இதன் காரணமாக இந்த ஆண்டில் வெளிநாடுகளிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்வதில்லை என்று இந்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

யானைப் பரிசு

இந்திய அரசாங்கத்தார் சவூதி அரேபியா நாட்டுக்கு ஒரு யானையைப் பரிசாக அனுப்பியுள்ளனர். ஐந்து வயதுள்ள இந்த யானையின் பெயர் 'சசாங்க்'. சவூதி அரேபியாவில் வெயில் மிகக் கடுமையாக இருப்பதைக் கருதி குளிர் சாதனக் கருவி அமைக்கப்பெற்ற ஓரிடத்தில் இந்த யானையைப் பொதுமக்கள் பார்வைக்காக வைத்திருப்பார்கள்.

வெளியார் உதவி

"என்ன நேர்ந்தாலும் எங்கள் சுதந்திரத்தை விடுவதில்லை என்ற உறுதியைக் கடைப்பிடிப்போம். எங்களுடைய அயல் நாட்டுக் கொள்கையை மாற்றிக் கொண்டால் பிரமாண்டமான அளவில் உதவி கிடைக்கும்

என்பது எங்களுக்குத் தெரியும். ஆனால் இத்தகைய உதவியை யாரிடமிருந்தும் பெற நாங்கள் விரும்பவில்லை.

"இந்தியா விஷயத்தில் உலக நாடுகளின் அக்கறை இருக்கிறது என்பதற்கு உண்மையான அடையாளம் ரொக்க மான்யம் கொடுப்பதல்ல; தொழில் நுட்பங்களைக் கற்றுக்கொடுத்து, பற்றுக்குறைப் பொருள்களை அளித்து இந்தியாவைத் தொழில் மயமாக்குவதற்கு உதவி செய்வதுதான் உண்மையான அடையாளம். அரசியல் பந்தம் இல்லாமல் உதவி கிடைத்தால், அது எங்கிருந்து வந்தாலும் நாங்கள் ஏற்கத் தயார்" என்று இந்திய அரசாங்க கைத்தொழில் வர்த்தக மந்திரி கல்கத்தா ஐரோப்பியர் வர்த்தக சபையில் கூறினார்.

பெண்களுக்குச் சொத்துரிமை

இந்திய அரசாங்க சட்ட மந்திரி ஸ்ரீ எச். வி. பட்டாஸ்கர், லோகசபையில் இந்து வாரிசு மசோதாவை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளுமாறு பிரேரித்தார். "இந்தியாவில் உள்ள சுமார் ஆறு கோடிப் பெண்களின் குறைகளைப் போக்கவே இந்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வருகிறது. இதன் மூலம் ஒரு பெரிய சமூகப் பிரச்னையைத் தீர்ப்பதே அரசாங்கத்தின் நோக்கம். இம் மசோதாவைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே நிறைவேற்றியிருக்க வேண்டும். இனியும் தாமதிக்க முடியாது; தாமதித்தால் சமூகத்துக்கு நன்மை ஏற்படாது. ஒருவர் உயிருடன் இருக்கும்பொழுது அவருடைய பெண்கள் பிள்ளைகள், மனைவி முதலியோருக்கு இந்த மசோதா சொத்துரிமை அளிக்கவில்லை. ஒரே குடும்ப முறையையும் இம் மசோதா ரத்துச் செய்யவில்லை. ஆனால் அதே சமயத்தில் பெண்ணுக்குச் சொத்துரிமை அளிக்கிறது" என்று பட்டாஸ்கர் கூறினார்.

பம்பாய்—குமரி சாலை

பம்பாயைக் கன்யாகுமரியுடன் இணைக்கும் மேற்குக் கடற்கரை சாலைக்குச் சுமார் ஏழுகோடி ரூபாய் செலவாகும். இதில் பாதித் தொகையை இந்திய அரசாங்கமும், மற்றொரு பாதியை பம்பாய் ராஜ்ய அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளும். பம்பாய் ராஜ்ய அரசாங்கத்துக்கு ஒரு வேளை சிரமமாய் இருக்குமானால், முழுச் செலவையும் இந்திய அரசாங்கமே ஏற்றுக்கொள்ளும்.

தமிழ் நாட்டில் புயல்

தமிழ் நாட்டில் மழையும் புயலும் பெருஞ் சேதத்தை உண்டாக்கின. முக்கியமாக தஞ்சாவூர் ஜில்லாவிலும் ராமநாதபுரம் ஜில்லாவிலும் உயிர்ச் சேதமும் பொருள் சேதமும் அதிகம். ராமநாதபுரம் ஜில்லாவில் சில பகுதிகளில் மூன்று நாட்கள் விமானத்திலிருந்து உணவுப் பொருள்கள் வழங்கப்பெற்றன. இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் புயல் கஷ்ட நிவாரணத்துக்கு உதவி கிடைத்தது.

இந்தியா—ருஷ்யா வியாபார ஒப்பந்தம்

இந்தியாவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே பொருளாதார உறவு ஒப்பந்தம் ஒன்று டில்லியில் கையெழுத்தாயிற்று. இது மூன்று வருஷ காலம் அமுலில் இருக்கும். இந்த ஒப்பந்தப்படி ருஷ்யா, இந்தியாவுக்குப் பத்துலட்சம் டன் உருக்கு அனுப்பும். மற்றும் எண்ணெய் உற்பத்திக்கான யந்திரங்களையும், சுரங்க வேலை யந்திரங்களையும் ருஷ்யா இந்தியாவுக்கு விற்பனை செய்யும்.

ருஷ்யா இந்தியாவிடமிருந்து தற்பொழுது வாங்குவதைவிட அதிகக் கணிசமான அளவுக்கு கச்சாப் பொருள்களையும், மற்றும் உற்பத்தி செய்யப் பெற்ற பண்டங்களையும் வாங்கும்.

இந்தியாவுக்கும் ருஷ்யாவுக்கும் இடையே ஒழுங்கான கப்பல் போக்குவரத்தை அமைப்பது அவசியம் என்று இரண்டு அரசாங்கங்களும் கருதுகின்றன.

ருமேனியா உதவி

இந்தியாவில் பெட்ரோல் எடுப்பதில், தொழில் நுட்ப உதவி அளிக்க ருமேனியா தேசம் முன் வந்திருக்கிறது.

மூன்ருவது உருக்கு ஆலை

“இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவுக்குள், லட்சிய எல்லையான அறுபது லட்சம் டன் உருக்கு உற்பத்தி செய்வது சுலபம். அதை விட அதிகமாகக்கூட உற்பத்தி செய்ய முடியும். இந்தியாவில் மூன்ருவது உருக்கு ஆலையை துர்காப்பூரில் ஏற்படுத்துவது பற்றி ஒரு பிரிட்டிஷ் கம்பெனியுடன் பேச்சு வார்த்தை நடந்து வருகிறது” என்று இந்திய அரசாங்கத் கைத் தொழில் வர்த்தக மந்திரி கூறினர்.

# சூரிய கிரஹணம்

---

சாமானிய மனிதன் மனத்தையும், விஞ்ஞானிகளின் கவனத்தையும் கவரும் நட்சத்திரங்கள், கிரஹங்கள் சம்பந்தமான வான நிகழ்ச்சிகளில் எல்லாவற்றையும் விட மிகவும் வசீகரமான பெருங்காட்சியாயுள்ளது பூரண மான சூரிய கிரஹணமே.

பூவுலகில் ஜீவராசிகள், தாவர வர்க்கங்கள் ஆகிய சகலத்தின் வாழ்வுக்கும் அடிப்படையான சக்திக்கு ஆதா ரம் சூரியன்தான் என்பது வெகு காலத்துக்கு முன்னரே உணரப்பட்ட விஷயம். மக்கள் வாழ்வில் சூரியனுக்குள்ள முக்கிய பங்கை அறிந்துதான் ஆதவனை இருள் சூழும் சம்பவங்களை ஜனங்கள் மிகுந்த அக்கறையுடன் கவ னித்து வந்திருக்கின்றனர். பண்டைய இலக்கியங்களில் சூரிய கிரஹணத்தைப்பற்றிய விவரங்கள் பல இடம் பெற்றிருக்கின்றன. சமீப காலத்தில் கிரஹணத்தின் இயற்கைபற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொண் டிருந்த போதிலும், இன்றும் இது கவர்ச்சிகரமானதோர் விசேஷ நிகழ்ச்சியாகவே இருந்து வருகிறது.

விஞ்ஞானிக்கு, கிரஹணம் சிருஷ்டி உலகத்தைப் பற்றிய அவனது ஞானத்தைப் பெருக்கிக்கொள்ளவும், தன் கோட்பாடுகளும், கருத்துக்களும் சரியானவை தானா வென்று பரிசோதனை செய்வதற்கும் ஒரு வாய்ப்பை அளிக்கிறது. உதாரணமாக, சூரியனின் ஆகர்ஷண சக்தி எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் ஒளிக்கதிர்கள் போனால் அவைகளின் மார்க்கம் சில டிகிரிகள் வளைந்து

போகும்படி நேரிடும் என்ற ஐன்ஸ்டீனின் முன்னறிவிப்பைப் பரிசோதிப்பதற்கு 1919-ம் வருஷம் மே மாதம் 29-ந் தேதி நிகழ்ந்த பிரசித்திபெற்ற கிரஹணம் அரிய சந்தர்ப்பத்தை அளித்தது.

சூரிய கிரஹணம் ஏற்படுவதற்கான காரணம்

சூரியனுக்கும் பூமிக்குமிடையே சந்திரனின் உருவம் வரும் நிலையை அனுசரித்துதான் சூரிய கிரஹணம் உண்டாகிறது. சந்திரனின் நிழல் பூமியையே மறைத்துவிடுகிறது. இந்த நிழல் உருவம் இரு பாகங்கள் கொண்டது. கூம்பிய இவ்வுருவத்துக்குள் நேரடியாக சூரிய வெளிச்சம் உட்செல்லுவதில்லை. மற்றொன்று, அரை இருள் நிழல்; இதில் சூரியனின் ஒரு பகுதியிலிருந்துமட்டும் வெளிச்சம் படுகிறது. பூரண இருள் நிழலில் இருக்கும் ஒருவருக்குச் சூரியனைச் சந்திரன் முழுதும் மறைத்திருப்பதுபோலத் தோன்றும். அரை இருள் நிழல் பகுதியிலிருந்து பார்ப்பவருக்குச் சந்திர வட்டம் சூரிய வட்டத்துக்குட்புகுந்து ஒரு பகுதியைமட்டும் மறைத்திருப்பதுபோல் தோன்றும். சில இயற்கை நிலை ஏற்பட்டால், அதாவது பூமியைச் சுற்றிச் சந்திரன் வரும் வட்டப்பாதையில் சந்திரன் இருக்கும் நிலையும், சூரியனைச்சுற்றிப் பூமி வரும் வானகோளப் பாதையில் பூமி நிற்கும் நிலைமையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஒருமைப்பட்டால், $29\frac{1}{2}$ நாட்களுக்கு ஒருமுறை ஒவ்வொரு அமாவாசையிலும் சூரிய கிரஹணம் ஏற்படக்கூடும். ஆனால் இப்படி ஏற்படுவது கிடையாது. உண்மையில் பூமியைச் சுற்றிச் சந்திரன் வரும் கோளப்பாதை சூரியனைச் சுற்றிப் பூமி வரும் பாதையைவிட்டு சுமார் ஐந்து டிகிரி விலகியே இருக்கும். ஏதோ ஒரு சில சமயங்களில் சூரியன், சந்திரன், பூமிஆகிய மூன்று கோளங்களும் கிட்டத்தட்ட

ஒரே நேர் பாதையில் வரும்போதுதான் கிரஹணம் ஏற்படுகிறது. இதர சமயங்களில் சந்திரனின் நிழல் திறந்த வெளியில் மறைந்துவிடுகிறது.

பூரண கிரஹணம் ஏற்படுமா ஏற்படாதாவென்பதை நிர்ணயிப்பது சூரியனின் கோணக் குறுக்களவைவிடச் சந்திரனின் கோணக் குறுக்களவு எவ்வளவு பெரியதாகவிருக்கிறதென்பதன் மூலம்தான் சாத்தியப்படும். சூரியனின் கோண குறுக்களவு பிறைவடிவில் சுமார் 32 நிமிஷங்கள். சந்திரனின் சராசரிக் கோணக் குறுக்களவு இதைவிடச் சற்று அதிகம். ஆகையினால்தான் சூரியனை விட அதிகமான அளவு ஆகாயமண்டலத்தைச் சந்திரன் வியாபித்துக் கொள்ளுகிறது; எனவே சந்திரன், சூரியனை முழுதும் மறைத்துவிட முடியும். இதையே வேறு விதமாகச் சொல்லுவோம். சூரியனுடைய குறுக்களவு 8,64,000 மைல். சந்திரனின் குறுக்களவு 2,160 மைல். பூமியிலுள்ள நமக்கு இவ்விரண்டு கோளங்களுமே ஒரே அளவுள்ளவையாகத்தான் தோன்றுகின்றன. இதற்குக் காரணம், சூரியன், சந்திரனைப்போல் நானூறு மடங்கு பெரியதாக விருந்தபோதிலும், சந்திரனுக்கும் பூமிக்குமிடையே உள்ள தூரத்தைப்போல் 400 மடங்கு அதிகமான தூரத்தில் சூரியன் இருப்பதுதான். சூரியன், சந்திரன், பூமி ஆகியவற்றுக்கு ஒன்றுக் கொன்று உள்ள இடைவெளித் தொடர்பு வான சாஸ்திர வளர்ச்சிக்குச் சாதகமாகவே இருக்கிறதென்று சொல்லவேண்டும். சூரியனின் கோணக் குறுக்களவுக்கும் சந்திரனின் கோணக் குறுக்களவுக்கு முள்ள வித்தியாசம் சற்றுக் குறைந்தாலுங்கூட பூரண சூரிய கிரஹணத்தைப் பார்க்க முடியாது.

கிரஹணம் பூரணமானதாகவிருக்குமா அல்லது பாதியாகவிருக்குமா, கங்கணக் கிரஹணமாக வருமா

வென்பனவற்றை நிர்ணயிப்பதற்குப் பல காரணங் களிருக்கின்றன. இதை, பூமியைச்சுற்றிச் சந்திரன் வரும் பாதை சரியான வட்டவடிவமாக இல்லாது முட்டை வடிவமாகவிருப்பது பாதிக்கின்றது. இதன் விளைவாக சில சமயங்களில் சந்திரன் மற்ற சந்தர்ப்பங்களைவிட அதிக நெருக்கமாகப் பூமிக்கு அருகில் வந்துவிடுகிறது. பூரண சூரிய கிரஹணம், சந்திர வட்டம் சூரிய வட்டத் துக்கு நேராக வந்தும், பூமியிலிருந்து சந்திரனுக்கு உள்ள தூரம், பூமியின் உருவம் சூரியனின் உருவத்தை விடப் பெரியதாக இருக்கும்போதுதான் ஏற்படும். பூமிக் கும் சந்திரனுக்கும் உள்ள தூரம் பலவிதப்பட்டிருக்கும். இது 2,22,000 மைலிலிருந்து 2,53,000 மைல்தூரம் வரை மாறுபட்டிருக்கிறது. இந்தத் தூர வித்தியாசத்தினல் சில சமயங்களில் சந்திரன் பெரிதாகத் தோன்றுகிறது; சில சமயங்களில் சிறியதாகக் காணப்படுகிறது. சந்திர னுக்கும், பூமிக்கும் இடையே உள்ள தூரம் குறைவாக விருக்கும்போது, சந்திரன் பெரியதாக இருப்பதாக நமக் குத் தோன்றுகிறது. சந்திரன் பூமிக்கு அருகே இருந்து அதன் வட்டம் சூரியனை மறைக்கு மளவுக்குப் பெரிதாக இல்லாதபோது, சந்திரனைச்சுற்றி வெளியே வட்டமான சூரிய ஒளி காணப்படுகிறது. இது ஒருவிதமான விசேஷ அரைகுறையான கிரஹணம்; இதற்குக் கங்கணக் கிர ஹணம் என்று பெயர். பூமியின் எப்பகுதியிலிருந்து பார்த்தாலும் சூரியனுக்கு நேரே சந்திர வட்டம் இல்லாத போது சாதாரண அரைகுறை கிரஹணம் ஏற்படும்.

நிழலின் சலன வேகமும், கிரஹணம் பிடித்திருக்கும் நேர அளவுகளும்

பூமி தன்னைத்தானே சுற்றிக்கொள்ளாவிட்டால் சந்திரனின் நிழல் சராசரி மணிக்குச் சுமார் 2,100 மைல் வேகத்தில் போய்க்கொண்டிருக்கும். ஆனல் பூமியும்

இந்நிழல் போய்க்கொண்டிருக்கும் திசையிலேயே பொதுவாக கிழக்கு நோக்கிச் சுற்றி வருகிறது. பூமத்தியரேகைக் கருகில் இதன் பரப்பு மணிக்கு 1,040 மைல் வேகத்தில் சுற்றிவருகிறது. பூமத்தியரேகையிலிருந்து பார்க்கும் ஒருவரை, பூமியிலிருந்து குறைந்த பட்சமான தூரத்தில் சந்திரனிருக்கும் போதும், அது உச்சத்திலிருக்கும் போதும் அதன் நிழல் மணிக்கு 1,060 மைல் வேகத்தில் பாய்ந்து செல்லும். இது ஒரு பீரங்கி குண்டு பாயும் வேகத்துக்குச் சமமாகும். இன்னும் அதிகமான விஸ்தாரத்தில் பூமிப் பரப்பின் சலனவேகம் குறைவாக இருக்கும்போது, நிழலின் ஓட்டத்தின் வேகம் அதிகமாகவே இருக்கும். நிழல், சூரியோதயம், அல்லது சூரியாஸ்தமனத்தில் கிரஹணம் ஏற்படும்போது விழுவதுபோல், சாய்வாக விழுந்தால், பூமியின் பரப்புக்கு அருகில் நிழலின் வேகம் வெகு அதிகமாக இருக்கும். மணிக்கு 4000 மைல் முதல் 5000 மைல் வேகம்கூட இருக்கும். பூமத்தியரேகைக்குச் சமீபத்திலிருந்து அனுகூலமான சூழ்நிலையில் (அதாவது சந்திரன் பூமிக்கு எவ்வளவு அருகிலிருக்கக்கூடுமோ அவ்வளவு அருகிலிருக்கும் போதும், சூரியன் பூமியிலிருந்து எவ்வளவு தூரத்திலிருக்கக்கூடுமோ, அவ்வளவு தூரத்திலிருக்கும்போது) பார்த்தால் பூரண சூரிய கிரஹணத்தின் நேரம் ஏழரை நிமிஷங்களிருக்கலாம். இதுதான் பூரண சூரியகிரஹணம் அதிகப்படியாக இருக்கக்கூடிய நேரம். அதுபோன்ற சூரிய கிரஹணம் இந்தியாவில் கி. பி. 2168-ம் ஆண்டில் காணப்படும். அப்பொழுது சூரியன் ஏழரை நிமிஷ காலத்துக்கு அடியோடு மறைந்திருக்கும். மனித வர்க்கத்தின் வரலாற்றிலேயே அதிக நேரமிருக்கக்கூடிய கிரஹணம் இதுவாகத் தானிருக்க முடியும்.

சூரிய கிரஹணத்தைப் பார்ப்பதில் நான்கு கட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. முதலாவது சந்திர வட்ட ஓரம் சூரியவட்ட ஓரத்தைத் தொடுவது. இரண்டாவது கிரஹணம் பூரணமாவது அல்லது கங்கண கிரஹணமாகவிருப்பது. மூன்ருவது, பூரண அல்லது கங்கண கிரஹணம் நீங்குவது. கடைசிக் கட்டம் சந்திரன் சூரிய வட்டத்தை விட்டு அடியோடு விலகிவிடுவது. முதல் கட்டத்திலிருந்து நான்காவது கட்டம் பூர்த்தியாகும் வரை நான்கு மணி நேரத்துக்கும் சற்று அதிகமாக ஆகலாம்.

கிரஹணங்கள் அடிக்கடி ஏற்படுதல்

பூமி முழுமையும் வைத்துக் கணக்கிட்டால் சந்திர கிரஹணங்களைவிட சூரிய கிரஹணங்களின் எண்ணிக்கை அதிகமாகவிருக்கிறது. இதன் விகிதாச்சாரம் இரண்டு சந்திர கிரஹணங்களுக்கு மூன்று சூரிய கிரஹணங்கள் என்ற அளவில் இருக்கிறது. சூரிய கிரஹணங்கள் சில இடங்களில்தான் தெரியும். சந்திரனின் நிழல் வழி மிகவும் குறுகியதாக இருப்பதால்—இது எப்பொழுதும் 163 மைலுக்கு மேலிருக்காது. எந்த ஒரு ஸ்தலத்திலிருந்தும் பூரண கிரஹணத்தைப் பார்க்கக்கூடிய சந்தர்ப்பம் குறைவுதான். நீண்டகால வரையறையின்மீது கணக்கிட்டுப் பார்த்தால் குறிப்பிட்ட ஓர் இடத்தில் சுமார் 360 வருஷங்களுக்கு ஒருமுறை பூரண சூரிய கிரஹணம் ஏற்படுகிறது. 100 வருஷங்களில் சராசரி சுமார் 238 சூரிய கிரஹணங்கள் ஏற்படுகின்றன. இவைகளில் 28 சதவிகிதமானவை பூரண கிரஹணங்கள். கிரஹணங்கள் யாவற்றிலுமே மூன்றிலொருபங்கு கங்கண கிரஹண வகையைச் சேர்ந்தவை; பாக்கியுள்ளவை அரைகுறையான கிரஹணங்கள்.

அடிக்கடி கிரஹண மார்க்கம் அநேகமாக சமுத்திரங்களைக் கடந்து செல்வதாக இருக்கும். பூரண கிரஹணத்தைப் பார்வையிடுவதற்காக வான சாஸ்திர நிபுணர்கள் கோடி இடங்களாகிய லாப்ரடார், ஐஸ்லாந்து, பைக்ஸ் மலையின் உச்சி, பஸிபிக் சமுத்திரத்தில் ஒரு பவழத்திட்டு, அரேபியப் பாலைவனங்கள் போன்ற பல ஸ்தலங்களுக்குச் சென்றிருக்கின்றனர்.

சூரிய கிரஹணத்தைப் பார்த்தல்

சூரியனை வெறுங்கண்ணால் எப்பொழுதும் பார்க்கக் கூடாது. நன்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த பிலிம் அல்லது புகையிடப்பட்ட கண்ணாடிமூலந்தான் சூரியனைப் பார்க்கவேண்டும். இதற்கென விசேஷ கருவிகள் இருக்கின்றன. இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையை எடுக்காவிட்டால் கண்ணுக்கு எவ்வளவோ கெடுதல் நேரிடும். மேலும் எந்தச் சமயத்திலும் புகைக் கண்ணாடித் துண்டு இல்லாதபடி, சூரியனை நேரடியாக சிறிய பூதக் கண்ணாடிகள் மூலமோ அல்லது தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் மூலமோ பார்க்கக்கூடாது. சூரியன் கிட்டத் தட்ட மூடப்படும்வரை விசேஷமானது எதுவும் கிடையாது. நிழல் தரும் எந்த மரத்தடியிலிருந்து பார்த்தாலும் ஒரு விசித்திரத் தோற்றம் காணப்படும். சாதாரணமாக, சூரிய வெளிச்சம் விருட்சத்தின் இலைகளினூடே பாய்ந்து ஒன்றோடொன்று மோதிக்கொள்ளும் பல வட்ட வடிவங்களாகப் பூமியில் விழும். ஒவ்வொரு வட்டமும் சூரியனின் பிம்பம்போல் தோன்றும். ஆனால் கிரஹணம் பிடிக்க ஆரம்பித்து நாழியாக ஆக, இச்சூரிய நிழல் புள்ளிகள் உருவத்தில் பிறைச் சந்திரனைப் போல் காட்சி அளிக்கின்றன. இது சூரியனின் உருவம் குறைந்து வருகிறதென்பதை அறிவுறுத்துகிறது. சின்னஞ்சிறு பிறை ஒவ்வொன்றின் நுனிகளும் பிறைச்

சூரியனின் ஓரங்களின் திசைக்கு எதிராக நிற்கும். ஒளிக்கதிர்கள் கண்ணுடிக்குள் பாய்வதுபோல் இலைகளின் சிறு துவாரங்களின் வழியாகப் பாய்ந்துசெல்லும்.

கிரஹணம் பூரணமாவதற்கு 10 நிமிஷங்களுக்கு முன்னரே இருட்டாவது நன்கு தெரியும். ஒளி, சூரியனின் ஓரத்திலிருந்து வருவதால், வெளிச்சத்தின் தன்மையே ஒரு மாதிரியாக மாறுபட்டிருப்பது புலப்படும். பிராணிகள் இது கண்டு பிரமித்துப் போய்விடுகின்றன; பறவைகள் கூடுகளுக்கு விரைந்தோடுகின்றன. சீதோஷ்ண நிலையில் உஷ்ணம் குறைந்துவிடுகிறது; சில சமயம் பனி தோன்றுகிறது. பார்வையிடுவோர் இருக்கும் இடம் சரியானதாக இருந்தால், சில விநாடிகளில் அவர் அடிவானக் காட்சியைக் காணலாம்; சந்திரனின் நிழல் பெரிய இடி மின்னல் காற்றுபோல் பயங்கரமான வேகத்தில் போவதைப் பார்க்கலாம். இந்நிழல் பார்வையாளர் இருக்குமிடத்துக்கு வந்து சேருவதற்குச் சற்றுமுன்னர் வெள்ளைப்பரப்புக்களில் ஒவ்வொன்றிலும் அசைந்தாடும் அலைகள் போன்ற பட்டைகள் தோன்றும். இவை நிழற்பட்டைகள் என்று அழைக்கப்படுகின்றன. இது விசித்திரமானதோர் வசீகர நிகழ்ச்சியாகும். பூமியின் சூழ்நிலையில் சூரிய ஒளி பாய்வதில் ஏற்பட்டுள்ள மாறுதல்களை இவை பிரதிபலிப்பதாகும். முன்னேறி வரும் சந்திரனின் நிழல் சூரிய வட்டத்தில் கடைசியாகக் காணப்படும் பிறையையும் மறைக்கும்போது, கிழக்குப் பகுதியில் பிரகாசமான ஒளித்துகள்கள் ஒரு விநாடி சிதறி வெளிவருகின்றன. இவை "பெயிலி மணிகள்" என்று கூறப்படுகின்றன. சந்திரனின் பரப்பில் உள்ள ஏற்றத் தாழ்வுகளின் காரணமாகவே இவை ஏற்படுகின்றன. உடனே கிரஹணத்தின் பிரதம அம்சமான ஒளிவட்டம் தோன்றுகிறது. முத்து போன்றதோர் வெண்மை ஒளி

சூரியனைச் சூழ்ந்துகொள்ளுகிறது. பூரணகிரஹணம் முடிந்துவிடுகிறது; ஒளிவட்டம் மறைகிறது; சூரியனின் மேற்பகுதியைச் சந்திரன் மடமடவென்று விடுவிக்கிறது; சூரியன் மறுபடியும் பூரண ஒளியுடன் பிரகாசிக்கிறது; கிரஹணமும் முடிந்து விடுகிறது.

ஆராய்ச்சிகள்

அதிகமான செலவு ஏற்பட்டாலுங்கூட பூரண சூரிய கிரஹணத்தைப்பற்றி ஆராய்ச்சிகள் நடத்துவதற்காகப் பல நாடுகளிலிருந்து பல விஞ்ஞான கோஷ்டிகள் தகுதியான இடங்களுக்குச் செல்கின்றன. ஏனென்றால், நட்சத்திரங்களில் சூரியன் ஒன்றின் சூழ்நிலையைப் பற்றித்தான் நாம் நுண்ணிய விவரங்களை ஆராயமுடியும். காணக்கூடிய இதன் செயல்களிலிருந்து கோடிக்கணக்கான இதர நட்சத்திரங்களின் போக்கை உணர்வதற்கான சிறந்த குறிப்புகளை நாம் பெறக்கூடும். மற்ற நட்சத்திரங்களைப்போல் சூரியனும் உஷ்ணமான வாய்வு நிறைந்த பெரிய கோளமே. இதன் சுற்றளவு சுமார் 9 லக்ஷம் மைலிருக்கும். சூரியனின் பரப்புப் படிவம் சூரியனைச் சுற்றியுள்ள ஒளிமண்டலம் என்று அழைக்கப்படுகிறது. இதன் சீதோஷ்ணம் 6,000 டிகிரிகள். இந்த ஒளி மண்டலத்திலிருந்துதான் நமக்கு ஒளியும், உஷ்ணமும் பெரும்பாலும் கிடைக்கிறது. இந்த மட்டத்துக்கு மேற்பட்டதெல்லாம் சூரியனின் சூழ்நிலைப்பகுதி என்று கூறப்படுகிறது. பூரண சூரிய கிரஹண சமயத்தில் சந்திர பிம்பம் சூரிய ஒளிமண்டலம் பூராவையும் மறைத்திருக்கும்போது சூரியனின் சூழ்நிலையில் உள்ள சூரிய ஒளிவட்டம், வர்ணவட்டம் முதலியவைபற்றி ஆராய்ந்தறிய வாய்ப்பு ஏற்படுகிறது.

பூரண சூரிய கிரஹணத்தின்போது சூரிய வட்டத்துக்கு அருகில் நட்சத்திர ஒளிக்கதிர்கள் வழியை விட்டு

விலகிச் செல்வதையும் பார்க்கலாம்; இது ஏற்படுவதற்குக் காரணம் ஐன்ஸ்டின் கோட்பட்டுப்படி சூரியனின் ஆகர்ஷணசக்தி மண்டலம்தான். இதுதவிர பூரண சூரிய கிரஹண காலத்தில் சூரியனிடமிருந்து ரேடியோ அலைகள் வெளிவருவதையும், அயனிமண்டலத்தில் ஏற்படும் மாறுதல்களையும், இன்னும் பலவிதமான வானிலை நிகழ்ச்சிகளையும் கூர்ந்து கவனித்துக் குறிப்புகள் எடுத்துக் கொள்ளலாம்.

கிரஹண ஆராய்ச்சிக் கோஷ்டிகளுக்கு ஏற்பாடு செய்வதென்பது எளிதான காரியமன்று; இது தகுந்த முன்னேற்பாடுகளுடன் செய்யப்படவேண்டிய காரியம். வானிலை விவரங்கள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும்; மின்சார வசதி, தண்ணீர் வசதியுள்ள இடம் பார்த்து வைக்கவேண்டும்; நுண்ணிய கருவிகளை எடுத்துச் செல்வதற்குப் போக்குவரத்து வசதிகள் செய்ய வேண்டும். ரேடியோ, பார்வை, இன்னும் இதர வகை நிகழ்ச்சிகள் பூராவையும் ஆராய்வதற்கு ஒரு கோஷ்டி 10 முதல் 20டன் எடையுள்ள சாமான்களைக் கொண்டு போக வேண்டியதிருக்கும். இவற்றில் பல கருவிகள் பூரண கிரஹணத்துக்கு முன்னரே சரிவர, சிரமமான சீதோஷ்ண சூழ்நிலையில், இணைத்துப் பொருத்திவைக்கப்பட வேண்டியவைகளாக இருக்கும்.

பூரணகிரஹணம் ஏற்படும்போது வான சாஸ்திரிக்கு ஒளிவட்டத்தைக் காண இரு விஞடிகள் கிடைப்பதுகூட அரிது. பிடிக்கப்பட்ட போட்டோ படங்களைச் சரிசெய்ய பல நாட்கள் ஆகும்.

# ஆப்பிரிக்கப் பிரயாணம்

எஸ். வி. தியாகராஜன்

எனது தந்தையாரும் நானும் பம்பாயிலிருந்து ஆப்பிரிக்காவுக்கு விமானத்தில் பிரயாணமானோம். விமானம் பெரிது. அதில் நாற்பத்திரண்டு பிரயாணிகள் இருந்தனர். அவர்களில் நான்கு அல்லது ஐந்து பேர் வெள்ளைக்காரர்கள்; மற்ற அனைவரும் இந்தியர்கள்.

இரவு ஒன்பதரை மணிக்கு விமானம் புறப்பட்டது. சிறிது நேரத்தில் தூங்கிவிட்டேன். விழித்தபொழுது இரவு மணி பன்னிரண்டரை. அப்பொழுது விமானம் கராச்சியில் இறங்கி நின்றது.

இரவு இரண்டு மணிக்கு விமானம் மீண்டும் புறப்பட்டது. சூரியன் உதயமாகும் நேரத்தில் ஏடன் போய்ச் சேர்ந்தோம். அப்பொழுது எனது கடிகாரத்தில் மணி எட்டரை. ஆனால் ஏடன் நேரம் காலை ஆறு மணி என்று சொன்னார்கள். இந்தியாவுக்கும் ஏடனுக்கும் இரண்டரை மணி நேர வித்தியாசம் இருக்கிறது.

ஏடன் அரேபியாவின் முனையில் இருக்கிறது. ஏடன் துறைமுகம் இயற்கையாக அமைந்த ஒன்று. ஏராளமான கப்பல்களைத் துறைமுகத்தில் கண்டேன். அவற்றை விமானத்திலிருந்து பார்த்தபொழுது, சிறு பிள்ளைகள் மழை வெள்ளத்தில் மிதக்க விடும் காகிதக் கப்பல்களைப் போலத் தோன்றின. ஏடன் நகரம் மலையடிவாரத்தில் இருக்கிறது. பெரிய பெரிய எண்ணெய்த் தொட்டிகளைக்

கண்டோம். நகரத்துக்கு அப்பால் கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே மணல் மயமாக இருந்தது.

ஏடனில் ஒரு மணி நேரம் தங்கிய பின்னர் எங்கள் விமானம் மீண்டும் புறப்பட்டது. அரபிக் கடல், செங் கடல் வழியே விமானம் சென்றது. கடலில் ஆங்காங்கு சிறிய, பெரிய கப்பல்கள் சென்றதைக் கண்டோம். கப்பல்கள் செல்லும்பொழுது, தண்ணீரில் கோடு போட்டது போன்று நுரை தெரிந்தது. அதைக் கொண்டு கப்பல்கள் எந்தத் திசையை நோக்கிச் சென்றன என்பதைக் கண்டு பிடித்தோம்.

ஏடனை விட்ட ஒரு மணி நேரத்துக்குள் ஆப்பிரிக்காவில் கென்யாப் பிரதேசத்தின் கரையைக் கண்டோம். அது பெரிதும் மலைப் பாங்கான இடம். ஆறுகள் பல ஓடின. பெரிய காடுகள் எதையும் காணவில்லை. பயிர்ப் பச்சைகள் எதுவுமே தென்படவில்லை.

சிறிது நேரப் பிரயாணத்துக்குப் பிறகு, கீழே ஜன நடமாட்டத்தைக் கண்டோம். காடுகளுக்கு வேலி போட்டிருந்தது சதுரம் சதுரமாகத் தெரிந்தது. பெரிய பாதைகள் வளைவில்லாமல் நேராக இருந்தன. திடீரென்று மேகக் கூட்டங்கள் வந்து விட்டன. மேகங்களின் நிழல்கள் பூமியில் பட்டபொழுது, அவை பெரிய ஏரிகளைப் போலத் தோற்றமளித்தன. சிறிது நேரத்தில் மேக மண்டலத்திலேயே பிரயாணம் செய்தோம். எங்கும் வெண்மையான மேகம். கீழே பூமி தெரியவில்லை. ஆகாயம் ஊதா நிறமாக இருந்தது. மேகங்களின் மீது சூரிய வெளிச்சம் பட்டதால் அவைகளைப் பார்க்கக் கண் கூசிற்று.

'இப்பொழுது நாம் பதினெட்டாயிரம் அடி உயரத்தில் பறக்கிறோம்' என்று விமானச் சிப்பந்தி கூறினர். நல்ல

குளிர்; கம்பளிகளால் போர்த்திக் கொண்டோம். காலையில் ஏடனில் இறங்கிய பொழுது, சூரியன் உதயமாகும் நேரத்திலேயே தாங்கமுடியாத வெப்பமாக இருந்தது. ஆனால் பதினெட்டாயிரம் அடி உயரத்தில் காலை பத்தரை மணிக்கு ஒரே குளிர்.

மேகங்கள் ஒருவாறு விலகின. விமானம் சிறிது தாழ்வாகப் பறந்தது. பல ஆறுகள் வெள்ளப் பிரவாகத்துடன் ஓடுவதைப் பார்த்தோம். ஆங்காங்கே அடர்த்தியான காடுகளும் மலைகளும் தெரிந்தன. பயிர் செய்திருப்பதற்கு அடையாளமாக நிலங்களைச் சுற்றி வேலிகளும் தென்பட்டன. நிலங்களைச் சரி சமமாகவும் ஒழுங்காகவும் மைல் கணக்காகச் செப்பனிட்டுப் பயிர்செய்திருந்தார்கள். சுமார் ஐந்து மைல் அகலமும் ஐந்து மைல் நீளமும் உள்ள சதுரங்களாக அமைத்து, வேலியிட்டு, மின்சாரக் கலப்பைகளால் உழுது பயிர் செய்வதாக அறிந்தோம். ஒவ்வொரு சதுரத்துக்கும், அதற்கென்று கார் செல்வதற்காக நல்ல ரோடுகள் அமைத்திருந்தார்கள்.

இந்தியாவை விட்டுப் புறப்பட்ட பதினைந்தாவது மணி நேரத்தில் நைரோபி விமான நிலையத்தை அடைந்தோம்.

நைரோபி, கென்யா தேசத்தின் தலை நகரம். சமுத்திர மட்டத்திலிருந்து ஐயாயிரத்து நூறு அடி உயரத்தில் இருக்கிறது. அங்குள்ள சீதோஷ்ண நிலை நமது நாட்டிலுள்ள நீலகிரியின் சீதோஷ்ண நிலையைப் போன்றது.

நைரோபியில் 'கார்டன்' ஹோட்டலில் தங்கினோம். அந்த ஹோட்டல் ஓர் இந்தியருக்குச் சொந்தம். அவர் கோஜா முஸ்லிம். கோஜாக்கள் என்பவர்கள் ஆகாகானை மத குருவாகக் கொண்டவர்கள். இந்த கோஜா முஸ்லிம் நாற்பது வருஷங்களுக்கு முன் பம்பாயிலிருந்து

கென்யாவுக்கு வந்தாராம். அது முதல் அங்கேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். அவருக்கு இரண்டு குமாரர்கள். ஒருவர் பல் டாக்டர்; மற்றொருவர் தந்தைக்கு உதவியாக ஹோட்டலில் வேலைபார்க்கிறார். நல்ல வசதியுள்ள அந்த இரண்டடுக்கு மாடி ஹோட்டலை ஒரு லட்துப் பத்தாயிரம் ரூபாய் செலவில் கட்டினாராம்.

ஹோட்டலுக்கு அருகிலேயே கடைத் தெரு, தபாலாபீஸ் முதலியவை இருந்தன. கடைத் தெருவுக்குச் சென்ற பொழுது, அங்கு வீதிகளின் சந்திகளில் நின்று கொண்டிருந்த போலீஸ்காரரின் உடை விசித்திரமாக இருந்ததுடன், அவர்கள் கார்களை நிறுத்தவும் போகச் சொல்லவும் செய்த சைகைகள் வேடிக்கையாக இருந்தன.

ரோடுகள் ஒழுங்காகவும் நேராகவும் அமைக்கப் பெற்றிருந்தன. நைரோபியில் வெள்ளைக்காரர் கடைகளை விட, இந்தியரின் கடைகளே அதிகம். இந்தியர்களில் குஜராத்திகளும், கோஜா முஸ்லிம்களும், சீக்கியர்களுமே அதிகம். குஜராத்திப் பெண்களையும், குஜராத்திக் குழந்தைகளையும் நகர முழுதும் கண்டோம். ஏராளமான குஜராத்திகளைப் பார்த்த பொழுது, எங்களுக்கு பம்பாயில் இருப்பதாகவே தோன்றியது.

இந்தியப் பெண்கள் இந்திய உடையே அணிகிறார்கள். கோஜா முஸ்லிம் பெண்கள் முகமூடி அணிவதில்லை. கோஜா முஸ்லிம் குருக்கள் (முல்லாக்கள்) தாடி வளர்த்துக் கொள்வதில்லை. இந்தியர்கள், முல்லாக்கள் உள்பட மேனாட்டு உடையையே அணிகின்றனர்.

வாடகை மோட்டார் ஒன்றில் நைரோபியைச் சுற்றிப் பார்த்தோம். நகரின் விஸ்தீரணம் சுமார் நூற்றைம்பது சதுர மைல் இருக்கும். நகரின் மத்தியில் தான் கட்டிடங்கள் நெருக்கமாக இருக்கின்றன. குடியிருக்கும்

இடங்களில் வீடுகள் தனித் தனியாக இருக்கின்றன. எங்கள் மோட்டார் ஓட்டி ஒரு நீக்ரோ. சுமாராக ஆங்கிலம் பேசினர். மிகுந்த ஆர்வத்துடன் எங்களுக்கு எல்லா இடங்களையும் காட்டினர்.

கவர்னர் மாளிகை, நீதிஸ்தலங்கள், ரயில்வே நிலையம், பொருட்காட்சிசாலை முதலியவைகளைப் பார்த்தோம்.

நைரோபியில் வெள்ளைக்காரர், இந்தியர், ஆப்பிரிக்க நீக்ரோ முதலியோர் தனித் தனிப் பகுதிகளில் வசிக்கிறார்கள்.

ஒவ்வொரு பகுதியிலும் போலீஸ் நிலையம், வைத்தியசாலை, தபால் நிலையம் முதலியவை தனித் தனியாக இருக்கின்றன,

வெள்ளைக்காரர் வசிக்கும் பகுதியிலுள்ள, பொழுது போக்குச் சங்கங்கள், திரைப்படக் காட்சிசாலைகள், ஹோட்டல்கள் முதலியவற்றில் இந்தியர்களையும் நீக்ரோக்களையும் அனுமதிப்பதில்லை.

ரயிலில் மூன்று வகுப்புக்கள் உண்டு. முதலாவது இரண்டாவது வகுப்புக்கள் மட்டும் கொண்ட ரயில் முதலில் ஓடும். அதில் ஒவ்வொரு வகுப்பிலும் வெள்ளைக்காரருக்கும், வெள்ளைக்காரர் அல்லாதாருக்கும் தனித்தனி வண்டிகள் உண்டு. இதற்குப் பின்னே செல்லும் ரயிலில் எல்லா வண்டிகளும் மூன்ருவது வகுப்பு வண்டிகளே. இதில் இந்தியர்களும் நீக்ரோக்களும் சேர்ந்து பிரயாணம் செய்வார்கள். வெள்ளைக்காரர்கள் மூன்ருவது வகுப்பில் பிரயாணம் செய்வதில்லை.

தேயிலைத் தோட்டங்களிலும், காப்பித் தோட்டங்களிலும் இன்னும் இதர தோட்டங்களிலும் வேலை செய்யும்

நீக்ரோத்தொழிலாளர்களுக்கு மாதச் சம்பளம் முப்பது ஷில்லிங்—அதாவது இருபது ரூபாய். நீக்ரோக்களின் ஆகாரம் குச்சிக் கிழங்கும் தேயிலேயும்தான். ஆப்பிரிக்கப் பெண்கள் கௌன் (Gown) அணிந்து அதற்கு மேல் அச்சடித்த காங்கா என்று சொல்லப்படும் மூன்று முழத் துண்டுகளைப் போர்த்தி,முன் பக்கமாக முடிந்து கொள்ளு கிறார்கள்.

பொருட்காட்சிசாலே அவசியம் பார்க்கத் தக்கது. இறந்த மிருங்களின் தலேகளேயும் தோல்களேயும் எடுத்துப் பதப்படுத்தி வைத்திருந்தனர். பைசன் (Bison) என்னும் பெரிய காட்டெருமைகளின் தலேகளேயும்,காட்டு ஆடுகளின் தலேகளேயும், நேரான நீண்ட கொம்புகள் உள்ள மானின் தலேகளேயும் கண்டோம். இதைப் போல எந்தப் பொருட்காட்சிசாலேயிலும் நான் இதுவரை பார்த்ததில்லே. ஆயிரம் அல்லது இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்தவர்கள் உபயோகித்த கல் ஆயுதங்களேயும், உளி, சுத்தி, போன்றவைகளேயும், பூமியிலிருந்து தோண்டியெடுத்த புதை பொருள்களான மண்டை ஓடுகளேயும் வைத்திருந்தார்கள்.

நமது தமிழ் நாட்டுக்கோயில்களில், தீபாலங்காரத்தின் போது, சுவாமிக்கு ஆயிரம் விளக்குக் காட்டி விட்டு கடைசியில் ஒரு பெரிய செம்பில் தனியாக விளக்குத் திரி மட்டும் போட்டுக் காண்பிப்பார்கள் அல்லவா? அதே மாதிரி ஒரு செம்பும், அதன் மேல் பாகத்தில் திரி போடுவதற்குச் சந்துள்ள ஒரு விளக்கும், நம் கோயில்களில் சந்நிதிக்கு முன்ஞல் கட்டித் தொங்கும் குத்து விளக்கு போன்ற மூன்று அடுக்குத் திரி விளக்கும் ஒரு கண்ணுடி அலமாரிக்குள் ஆப்பிரிக்கர் உபயோகப் படுத்திய சாமான்களுடன் வைக்கப் பெற்றிருந்தன. அவைகளே "தேங்காய் எண்ணெய் விளக்குகள்" என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆப்பிரிக்கர்கள் பழைய காலத்தில் அணிந்ததும், தற்பொழுது அணிந்து கொள்வதுமான தலை அலங்காரங்களும், கத்தி, வில், அம்பு, கேடயங்கள், பெண்கள் அணியும் நகைகள் முதலியவைகளும் காட்சியில் இருந்தன.

பெரிய அடி மரக்கட்டை ஒன்றைப் பார்த்தேன். பெரிய அடிமரத்தை உள்ளே குடைந்து விட்டு, ஒரு பக்கம் மட்டும் தோலால் மூடி, மத்தளம் போலக் கட்டியிருந்தார்கள். தோலின்மீது தட்டியதும் பெரிய சப்தம் உண்டாயிற்று. இதில் தட்டி, சப்தத்தை எழுப்பி வெளியூர்களுக்குச் செய்தி அனுப்புவார்களாம். இது பண்டைக் காலத்துத் தந்தி அனுப்பும் முறை என்று கூறினர்கள். இப்பொழுதும் கூட, ஆப்பிரிக்காவின் உள் நாட்டுப் பிரதேசங்களில் இதை உபயோகிக்கிருர்கள் என்று கேள்வியுற்றேன்.

நைரோபியில் கவர்னர் பார்க் என்பது பெரிய பூங்காவனம். பெரிய மரங்களும், அழகிய பூஞ்செடிகளும் இருந்தன. மரப்பட்டைகளைக் கூரையாக அமைத்த குடிசை ஒன்றைப் பார்த்தோம். பூங்காவனத்துக்குள் சுமார் மூன்று அல்லது நான்கு மைல் தூரம் வரை பாதை அமைத்திருந்தார்கள். பாதையின் ஓரங்களில் பசும்புல் வளர்த்து அவைகளை மிகவும் ஒழுங்காக வெட்டியிருந்தார்கள். ஆங்காங்கே, குப்பைத் தொட்டிகளும் இருந்தன.

நைரோபியில், வழை, மாதுள மரம், ஊமத்தைப்பூ முதலியவைகளும், நீலகிரியிலிருப்பது போன்ற யூகலிப்டஸ் மரமும் ஏராளம்.

கென்யாவில் பார்க்க வேண்டியவைகளில் முக்கியமானது நாஷனல் பார்க் என்னும் தேசீயப் பூங்கா. சுமார் நாற்பதுமைல் அகலமும் ஐம்பது மைல் நீளமுமுள்ள இப்பூங்கா ஒரு சமவெளிப் பிரதேசம். இங்கே

பெரிய மரங்கள் இல்லை. சிங்கம் முதலிய மிருகங்கள் இங்கே ஏராளம். இந்தப் பூங்காவைச் சுற்றி உயரமான இரும்பு வேலி அமைத்திருக்கிறார்கள்.

இப்பூங்காவுக்குள் மோட்டாரில் செல்லலாம். மிருகங்கள் இயற்கையாகத் திரிவதைப் பார்க்கலாம். யாரும் வேட்டையாடக் கூடாது.

இந்தப் பூங்கா நைரோபியிலிருந்து பதினாறு மைல் தூரத்தில் ஆரம்பமாகிறது. எங்கள் ஹோட்டல்காரருடைய வாடகை மோட்டாரை அமர்த்திக்கொண்டு இங்கே சென்றோம். செல்லு முன் காரில் ஏழு காலன் பெட்ரோல் ஊற்றிக்கொண்டோம்.

"கென்யா கவர்னரின் காரியதரிசியும் ஒரு பிரெஞ்சு பிரமுகரும் மோட்டாரில் மாலை நான்கு மணிக்கு நாஷனல் பார்க் சென்றனர். சென்ற இடத்தில், காரில் பெட்ரோல் அடைத்துக்கொண்டது. வெளியே இறங்கி வந்து பழுது பார்க்கலாம் என்றால், தனி சிங்கம் ஒன்று அடிக்கடி காருக்கு அருகில் வந்தது. இரவில் வெகு நேரம் வரை வேறு கார்கள் ஒன்றும் வரவில்லை. நீண்ட நேரத்துக்கு அப்பால் அங்கு வந்த கார் ஒன்றை அருகில் வரும்படி அழைத்து, இவர்கள் அந்தக் காரில் ஏறிக் கொண்டார்கள்" என்ற செய்தியை அன்றைய தினசரிப் பத்திரிகையில் தான் படித்தோம்.

பூங்காவின் வாயிலில், ஆள் ஒன்றுக்குப் பத்தரை யணச் செலுத்தி அனுமதிச் சீட்டுப் பெற்று உள்ளே சென்றோம். நாங்கள் செல்லும்பொழுது மாலை மூன்று மணி.

உள்ளே ஒரு பர்லாங் தூரம் சென்றதும் சுமார் நாற்பது வரிக்குதிரைகளும், ஐம்பது மான்களும் திரிந்து கொண்டிருந்ததைப் பார்த்தோம்.

அங்கங்கே சிறிய ஓடைகள் ஓடின. அந்த இடங்களில் கொடை வெள்ளை வேளா மரங்கள் இருந்தன. மற்ற இடங்களில் ஒன்று அல்லது இரண்டடி உயரமுள்ள பச்சைப்புல் மிகவும் செழிப்பாக வளர்ந்திருந்தது. கொஞ்ச தூரம் சென்றதும் வெட்ட வெளியாகப் பாலைவனம் போல இருந்தது. புல் மட்டும் புதர்கள் இல்லாமல் முளைத்திருந்தன.

மான்களும், காட்டு ஆடுகளும், நரிகளும், நெருப்புக் கோழிகளும் கூட்டம் கூட்டமாக தன்னிச்சைப்படி மேய்வதைப் பார்த்தோம்.

நான்கு சிறிய விமானங்கள் மேலே பறந்தன. விமானத்திலிருந்தும் இந்த தேசீயப் பூங்காவையும் அதிலுள்ள மிருகங்களையும் பார்க்கலாம். இதற்காகவே விமானங்கள் தாழ்ந்து பறந்தன.

நாங்கள் பதினைன்கு மைல் தூரம் சென்றோம். சிங்கங்கள் வசிக்கும் காட்டுக்குள் போகுமுன், எனது தந்தையார் ஊருக்குத் திரும்பிவிடலாம் என்றார். அங்கே எங்களுடைய கார் மட்டும்தான் இருந்தது. கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் வேறு கார்கள் எதுவும் இல்லை. அன்றியும் மறுநாள் காலையில் நாங்கள் மடகாஸ்கருக்குப் புறப்பட வேண்டியிருந்தது. நாங்கள் சென்ற கார் மிகப் பழையது. அதை 'ஸ்டார்ட்' செய்வதற்கே கஷ்டமாக இருந்தது. கார் நடுவழியில் தங்கிவிட்டால், மறுநாள் காலை எட்டு மணிக்கு விமானத்துக்குச் செல்ல முடியாமற் போகுமே என்று கருதியதால் சிங்கம் இருக்கும் காட்டுக்குள் போகாமல் திரும்பினோம்.

மாலையில் நைரோபி கடைத்தெருவுக்குச் சென்றோம். இரண்டு பேர் தமிழில் பேசிக்கொண்டு சென்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் முப்பத்தைந்து வயது

இருக்கலாம். அவர்களுடன் இருந்த இரு குழந்தைகளும் தமிழில் பேசின.

எனது தந்தையார், அவர்களில் ஒருவரைப்பார்த்து "நீங்கள் திருநெல்வேலியா?" என்ருர். மற்றவரைப் பார்த்து "நீங்கள் புதுச்சேரியா?" என்ருர்,

"நீங்கள் எந்த ஊர்? எங்கள் ஊர் உங்களுக்கு எப்படித் தெரிந்தது?" என்ருர் திருநெல்வேலிக்காரர்.

"நீங்கள் பேசிய நடையிலிருந்து கண்டுபிடித்தோம்" என்ருர் என் தந்தையார்.

புதுச்சேரிக்காரர் பெயர் ரத்னம். புதுச்சேரியில் எங்களுக்குத் தெரிந்தவர்களுக்கு அவர் சொந்தக்காரர். நைரோபி தபாலாபீஸில் வேலை செய்கிருர்.

திருநெல்வேலிக்காரர், ஸான்ஸிபார் தீவில் அரசாங்க மராமத்து இலாகாவில் என்ஜினியர். அவர் பெயர் நடராஜன்.

# கலையும் தொழிலும் கலந்த படிப்பு

அமெரிக்காவில் தொழில் துறை ஆராய்ச்சியும் இயந்திரப் பெருக்கமும் ஏற்பட்டிருப்பதால், உற்பத்தித் துறையில் புதிய தொழில் நுட்ப முறைகளை உபயோகிக்கக்கூடிய பயிற்சி பெற்ற தொழிலாளிகள் வேண்டியதிருக்கிறது. எனவே மேற்பதவிகள் பெற விரும்பும் தொழிலாளிகள் மட்டுமன்றி, உயர்தரப் பாடசாலை மாணவர்களும் தொழிற்கல்வி பெறுகிருர்கள். அவ்வாறு தொழிற் கல்வி பெறுவோர் தொகை அதிகமாகி வருகிறது.

1917-ல் அமெரிக்கக் காங்கிரஸ் சிமித்–ஹக்ஸ் சட்டம் என்னும் ஒரு சட்டம் செய்தது. அதன்படி மாணவர் தாம் விரும்பும் தொழிலைக் கற்பதற்கு நிதி ஒதுக்கப்பட்டது. அது முதல் அமெரிக்காவில் உயர்தரப் பாடசாலைக் கல்வித் திட்டத்தில் தொழிற் கல்வி இன்றியமையாத ஓர் அம்சமாக விளங்குகிறது.

14 வயதுக்கு மேற்பட்ட யாவரும் இலவசமாகத் தொழிற் கல்வி பெறலாம். தொழிற் கல்வி பெறுவோர் இருவகைப்படுவர்:

1. முழு நேரத்துப் பள்ளிக்கூடங்களில் தொழிற் கல்வியும் கலைப் பயிற்சியும் பெறும் இளைஞர். அவர்கள் பயிற்சி முடிந்தபின் உயர்தரப் படிப்பில் தேர்ச்சி பெற்றதாகத் தகுதிச் சீட்டுப் பெறுகிருர்கள். அவர்களுள் பலர் மேற்படிப்புப் படிப்பதற்காகக் கல்லூரிகளில் சேர்கிருர்கள்.

2. வேலை செய்துகொண்டே குறை நேரம் தொழிற் பயிற்சி பெறுவதற்காகப் பள்ளிக்கூடத்துக்கு வருவோர்,

மத்திய அரசாங்கத்தின் கல்வி இலாகாவின் தொழிற் பகுதி விவசாயம், குடும்பப் பொருளாதாரம், வாணிபம், தொழில் என்னும் கிளைகள் மூலமாய்த் தொழிற் கல்வியை நிர்வகிக்கிறது,

விவசாயத் திட்டம்

விவசாயத் துறையில் கல்வி அளித்து விவசாயிகளை அதிகத் திறமையுள்ளவர்கள் ஆக்குகிறார்கள்; வருங் கால விவசாயிகளுக்கும் பயிற்சி அளிக்கிறார்கள்.

பண்ணையிலும் பயிற்சி அளிக்கிறார்கள்; பள்ளிக் கூடத்திலும் பயிற்சி அளிக்கிறார்கள். பண்ணை இயந் திரங்களைப் பற்றியும், மண் வளத்தையும் மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாப்பது பற்றியும், திறமை யாய்ப் பயிர்களை விளைவிப்பது பற்றியும், விளைவை விற்பது பற்றியும், உணவைப் பாதுகாப்பது பற்றியும் மாணவர் பயில்கிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் மாணவர் இப் பயிற்சி பெறுவ தால் முற்போக்கான விவசாய முறைப்படி விவசாயம் நடைபெறுகிறது. யாவரும் புது முறைகளைக் கையாள் கிறார்கள்.

குடும்பப் பொருளாதாரப் படிப்பு

குடும்ப நலத்துக்குரியவற்றைப் படிப்பிப்பதே இந்தப் பயிற்சியின் நோக்கம். பொருள்களைத் தெரிந்து கொள் ளல், விலைக்கு வாங்குதல், உணவுப் பொருள்களைப் பாது காப்பாய் வைத்துக் கொள்ளல், வீட்டில் நோயாளிகளைப் பார்த்தல், முதல் உதவி செய்தல், குடும்பத்துக்கும் சமு தாயத்துக்கும் உள்ள தொடர்பை அறிந்து கொள்ளல் முதலியவையெல்லாம் கற்பிக்கப்படுகின்றன.

வாணிபமும் தொழிலும் பற்றிய கல்வி

பொருள்களைச் செய்யுமுன் அவற்றை எவ்வாறு செய்வது என்று வரைந்து கொள்வதற்கும், அவற்றைச் செய்வதற்கும், இணைப்பதற்கும் பயிற்சி அளிக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்க அவர்களுக்கு ஆயத்தப் பயிற்சி அளிப்பதே இதன் நோக்கம்.

உயர்தரப் பாடசாலைகளில் மாணவர்கள் சரித்திரம், விஞ்ஞானம், ஆங்கிலம் முதலிய பாடங்களைப் படிப்பது மன்றி, தொழில்களிலும் பயிற்சி பெறுகிறார்கள். விஞ்ஞானம், சித்திரம், கணிதம் இவற்றில் பெற்ற அறிவைத் தொழில் பயிற்சியில் பயன்படுத்தலாம்.

தச்சு வேலை பழகுகிறவர்கள் உண்மையான வீடுகளையே கட்டுகிறார்கள். ரொட்டி சுடப் பழகுகிறவர்கள் ரொட்டி சுட்டு, விற்கிறார்கள் அல்லது உண்கிறார்கள்.

மேற்கூறியது முழு நேரத்துப் பள்ளிக்கூடங்களில் படிப்போர் பெறும் தொழிற்பயிற்சி. இதுவேயன்றி வேலை பார்ப்போருக்கும் தொழிற்பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் தங்கள் அறிவைப் பெருக்குவதற்கு இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இது மூவகைப் படும்.

வேலை பார்ப்போர் வேலை நேரத்தின் ஒரு பகுதியில் சித்திரம், விஞ்ஞானம் முதலியவற்றைத் தொடர்பு படுத்திப் படிக்கிறார்கள். இது முதல் வகை.

முழு நேரம் வேலை செய்பவர்கள் இரவில் நகை செய்தல், தையல், வெல்டிங் முதலிய பல வேலைகளைப் படிக்கிறார்கள். இது இரண்டாவது வகை.

பள்ளி மாணவர் பாதி நேரம் வேலை செய்து, பாதி நேரம் பாடங்களைப் படிப்பது மூன்றாவது முறை. வேலை செய்வதற்கு அவர்களுக்கு ஒழுங்கான சம்பளம் உண்டு.

விற்பனைப் பயிற்சி

விற்பனைத் துறையில் வேலை செய்வோர் விசேஷ பயிற்சி பெறுகின்றனர். பண்ணைப் பொருள்களையும், தொழிற்சாலை பொருள்களையும்,சில்லரையாகவும் மொத்த மாகவும், எவ்வாறு விற்பது,என்பது பற்றி அவர்கள் படிக் கிறார்கள்.

பள்ளிக்கூடத்தில் பல்வகைப் பயிற்சி

வாணிபத்தில் பல துறைகளிலும் பள்ளி மாணவர் பயிற்சி பெறுகின்றனர். மாணவர் டைப் அடிக்கவும், கணக்கு எழுதவும், தொழில்களை நடத்தவும், குமாஸ்தாக் களாக வேலை பார்க்கவும் படிக்கின்றனர்.

தொழில் நிர்வாகம், தொழில் துறை ஆராய்ச்சி முதலிய உயர்ந்த பயிற்சிகளும் அளிக்கப்படுகின்றன. வகுப்பறைகளில் உயர்தரப் பாடசாலை மாணவர் வாணிபப் படிப்பு படிக்கின்றனர்; வெளியே வாணிப நிலையங்களில் சில மணி நேரம் வேலை செய்து பழகுகின் றனர்.

ஒவ்வொரு மாணவனும் எந்தத் தொழிலைத் தெரிந் தெடுக்க வேண்டுமென்று அவனுக்கு ஆலோசனை சொல் வதற்குரிய ஏற்பாடுகள் அமெரிக்காவில் உள்ளன. தனித் தனியே ஒவ்வொரு மாணவனின் திறமையையும் ஆலோசனை சொல்வோர் ஆராய்ந்து அவனவனுக்கு ஏற்ற வேலை இன்னதென்று சொல்கின்றனர்.

# இந்தியாவில் மின்சார அபிவிருத்தி

ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மின்சார அபிவிருத்தித் திட்டங்கள் இன்றியமையாதவை என்பது யாவரும் அறிந்த விஷயமே. ஒரு நாட்டின் செழிப்பு, அந்நாட்டிலுள்ள இயற்கை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும், அந்நாட்டில் கிடைக்கக்கூடிய மின்சார விநியோகத்தையே, அது பெரிதும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. மூலப் பொருள்களை உபயோகப்படக்கூடிய பொருள்களாக மாற்றுவதற்கு மின்சாரம் இன்றியமையாதது. அமெரிக்காவை வளப்பம் மிகுந்த நாடாக மாற்றியது மின்சாரம்தான். அமெரிக்காவில் ஊதிய விகிதங்களும், வாழ்க்கைத் தரமும் உயர்ந்துள்ளன; ஏனெனில் இந்தியாவில் நாம் உபயோகிப்பதைவிட, மிக அதிக அளவில் மின்சாரத்தை அமெரிக்கர்கள் உபயோகிக்கிருர்கள். ஒரு குறித்த அளவிலுள்ள மானிட முயற்சியின் உற்பத்திச் சக்தியை அதிகப்படுத்தி, அதன் மூலம், சராசரி மனிதனெருவனது வாழ்க்கைக்கவசியமான பொருள்களையும், சௌகரியங்களையும், பிரீதிகளையும், அன்றைய தினத்தில் அவன் உழைத்தன் பலனைப் பெறச்செய்து, அத்துடன், அவன், விஷய ஞானம் பெறவும் மனதுக்குகந்தவற்றை ரசித்து இன்புறவும் மேற்கொண்டும் ஓய்வுநேரம் பெறுவதற்கும் வகை செய்வது மின்சாரம்தான்.

**மின்சாரத்தின் இணக்கமான தன்மை**

மானிட வர்க்கத்தின் சேவைக்குப் பயன்படும் பலவகைப்பட்ட சக்திகளில், மின்சார சக்திதான் மிகவும்

வியாபகமான ஆற்றல் வாய்ந்தது. அதன் தூய தன்மையையும், அதைப் பயன்படுத்துவதில் இருக்கும் சௌகரியத்தையும் கவனித்தால், மனிதனுல் இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்துள்ள சக்திகளுள் இந்தச் சக்தி தான் மிகச் சிறந்தது என்று சொல்லலாம். பகலானுலும், இரவானுலும் எந்த நேரமானுலும் சரி, உஷ்ணத்தையோ வெளிச்சத்தையோ உண்டாக்குவதற்கும் அல்லது இயக்க சக்தியை உற்பத்தி செய்யவோ அல்லது குளிரச் செய்யவோ, மின்சாரத்தை மிகச் சிறந்தவகையில் பயன் படுத்த முடியும். உற்பத்தி நிலையங்களிலிருந்து நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பாலுமுள்ள இடங்களுக்குச் சிக்கனமாக அனுப்பப்பட்டு, வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தும் பல திறப்பட்ட உபயோகிப்போர்களுக்கு விநியோகிக்கப்படுவது, மின்சாரம் சம்பந்தப்பட்டமட்டில் சாத்தியமான விஷயமே. இத்தகைய அனுகூலம், தற் போது, வேறெந்தவித சக்தியைப் பயன்படுத்தினுலும் நமக்குக் கிடைக்காது. நவீன உலகில் மின்சாரம் எவ் வளவு முக்கியமாக விளங்குகிறது என்பது, மின்சார விநி யோகத்தைச் சிறிது காலத்துக்கு நிறுத்திவிட்டால், சமுதாயம் என்ன பாடுபடும் என்பதை நாம் நினைத்துப் பார்த்தால் நன்கு புலனுகும். சர்வமும் அந்தகாரமயமாகி விடும்; போக்குவரத்து சீராக நடக்காது; செய்திப் போக்குவரத்து வசதிகள் பயனற்றுப் போய்விடும்; ஆலைகள் மூடப்பட்டுவிடும்: உணவு உற்பத்தி குறைந்து, குழாய்த் தண்ணீர் நின்றுவிடும். சுருங்கச் சொன்னுல், நவீன நாகரிகம் குலைந்துப் பாழாகிப்போகும். ஒரு நாடு, மின்சாரத்தை எந்த அளவுக்கு உபயோகித்து வருகிறது என்பது அந்நாட்டின் பொருளாதார அபி விருத்தியை எடுத்துக் காட்டுவதாக விளங்குகிற தென்ருல், இன்றைய தினத்தில் மின்சாரம் எவ்வளவு

இன்றியமையாததாகி விட்டிருக்கிறது என்பது நன்கு விளங்கும்.

இந்தியாவில் மின்சார அபிவிருத்தி செய்வதற்காகத் திட்டமிடும்போது, தொழில் வளமிகுந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஒப்பிட்டுப் பார்ப்பது பயனற்றது. இந்தியா விவசாய நாடாகவே இருந்து வந்திருக்கிறது. நம் நாட்டின் ஜனத்தொகையில் பெரும்பகுதியினர் கிராமப் புறங்களில் வாழ்ந்து வருகின்றனர். பொருளாதார அபிவிருத்திக்கான திட்டம் எதுவாயினும் சரி, அதன் முக்கிய நோக்கம், கிராமப் புறங்களில் வாழும் பெரும்பகுதியினருக்குப் போதிய அளவில் வேலை அளிக்க ஏற்பாடு செய்வதாக இருக்க வேண்டும். சிறு தொழில்களையும், உள்ளூர் தொழில்களையும் நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்படுத்தி நடத்தி வருவதன் மூலம் நம் நாட்டு மக்களுக்கு முழு நேர வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும். ஆகவே, கிராமப் புறங்களிலுள்ள சிறு தொழில்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குகந்த வகையில், மின்சார அபிவிருத்திக்கான யந்திர சாதனங்களை அமைக்கவேண்டும். ஆனபோதிலும், பெரிய ஸ்தாபனங்களாக இயங்கினால்தான், உருக்கு, கன ரக ரசாயனப் பொருள் உற்பத்தித் தொழில்கள் முதலியவை சிக்கனமாக நடக்கக்கூடும். ஆகவே, அம்மாதிரியான தொழில்களில், பெருமளவில் மின்சார யந்திர சாதனங்களை நிர்மாணிப்பது இன்றியமையாததாகும்.

### ஜல மின்சாரம், தெர்மல் மின்சாரம்

பல்வேறு பிரதேசங்களில் கிடைக்கக்கூடிய மின்சார உற்பத்திக்கான ஆதாரங்களின் தன்மையைப் பொறுத்தே, மின்சார அபிவிருத்தி எந்த மாதிரி

அமையும் என்பது இருக்கும்; அதாவது, ஜல-மின்சார உற்பத்தி நிலையம் அல்லது தெர்மல் நிலையம், மின்சார போக்குவரத்து விநியோக முறைகள் முதலியவை மின்சார உற்பத்தி ஆதாரங்களின் தன்மையைப் பொறுத்தே அமையும். நிலக்கரிச் சுரங்கங்களுக்கு, அருகிலுள்ள பிரதேசங்களில், நிலக்கரிமூலம் நீராவியை உண்டாக்கி, அதன் மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்வது சிக்கனமாக இருக்கும். உற்பத்தி நிலையத்தி லிருந்து, மின்சாரம் உபயோகிக்கப்படும் இடங்களுக்கு, மின்சாரத்தை அனுப்புவது சிக்கனமாக இருந்தால், ஜல-மின்சார உற்பத்தி நிலையம் நிர்மாணத்துக்குரிய வசதிகளைப் பெருக்கலாம். ஒவ்வொரு வருஷத்திலும் பெய்யும் மழையின் அளவில் ஏற்றத்தாழ்வு இருப்பதன் காரணமாக, ஜல-மின்சார உற்பத்திக்காகத் தேக்கப்படும் தண்ணீர் அளவில் பெருத்த மாறுதல்கள் நேரிடக் கூடுமாதலால், ஜல-மின்சார நிலையங்களையும், தெர்மல் நிலையங்களையும் இணைத்து இயக்குவது பயன்தரத்தக்க தாக இருக்கும். சுருங்கச் சொன்னால், பலவகைப்பட்ட விஷயங்களையும், ஒன்றுக்கொன்று முரணான தோதுக்களை யும் ஆராய்வது, ஒவ்வொரு பிரதேசத்திலும் மின்சார அபிவிருத்திக்கான திட்டத்தைத் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இறுதியாக வகுப்பதற்கு, மிகவும் அவசியமா யிருக்கிறது.

மின்சார உற்பத்தி தோதுக்கள்

பெருமளவில் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு முக்கிய ஆதாரங்களாக விளங்குபவை ஓடும் நீர், நிலக்கரி, கனி எண்ணெய், அணு அடுக்குச் சாதனங்கள். இந்தி யாவில், நிலக்கரி அதிக அளவில் கிடைக்கிறது. ஆன போதிலும், நிலக்கரிச் சுரங்கங்கள் பெரும்பாலும், பீஹார், மேற்கு வங்காளம், மத்தியப் பிரதேசம், ஹைதராபாத்

ஆகிய ராஜ்யங்களில்தான் இருக்கின்றன. ஆகவே, நிலக்கரிப் படிவங்கள் சில ராஜ்யங்களில் மட்டுமே இருப்பதால், பல நூற்றுக்கணக்கான மைல்களுக்கப்பாலுள்ள இடங்களுக்கு; குறிப்பாக, தெற்குப் பிராந்தியத்துக்கு, நிலக்கரியை அனுப்ப அதிக செலவாகும். உலோக உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படும் நிலக்கரி ரகங்கள் ஓரளவுதான் நம் நாட்டில் கிடைத்துவருவது தெரிந்த விஷயமே. ஆகவே, அந்த ரகங்களை, உலோக உற்பத்திக்கு மட்டுமே உபயோகிப்பதற்கு ஒதுக்க வேண்டுமென்பது முன்னேச்சரிக்கைக்கான யோசனையே. தெர்மல் நிலையங்களின் மூலம் மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்வதற்குக் கீழ்த்தர நிலக்கரி ரகங்களை மட்டுமே பயன்படுத்தவேண்டும். ஆகவே, தாமோதர நதிப் பள்ளத்தாக்குப் பிரதேசத்திலுள்ள பொக்காரோ போன்ற பெரிய மின்சார உற்பத்தி நிலையங்களில், கீழ்த்தர நிலக்கரி ரகங்களைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. சென்னை ராஜ்யத்தில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது,சென்னை மைசூர், திருவாங்கூர்--கொச்சி ஆகிய ராஜ்யகளின் ஜல-மின்சார உற்பத்திச் சக்தியைப் பெருக்கி ஸ்திரப்படுத்துவதற்காக, பழுப்பு நிலக்கரியைப் பயன்படுத்தித் தெற்குப் பிராந்தியத்தில் பெரிய தெர்மல் நிலையமொன்றை ஸ்தாபிக்கலாம் என்ற அபிலாஷையை மனதில் உண்டாக்கியிருக்கிறது.

எண்ணெய் வளம்

இந்தியாவில், கனி எண்ணெய் ஆதாரங்கள் ஓரளவுக்குத் தான் உண்டு. பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய், உலைகளுக்குப் பயனாகும் எண்ணெய் ரகங்கள் ஆகியவை சம்பந்தமான நாட்டின் மொத்த

தேவைகளின் 5 முதல் 6 சதவிகித அளவுவரை எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் திக்பாய் என்ற கனி எண்ணெய் சுரங்கம் ஒன்றுமட்டுமே, நம் நாட்டில், (மேல் அஸ்ஸாமில்) இருக்கிறது.

இந்தியாவுக்குத் தேவைப்படும் கனி எண்ணெய் ரகங்களில் பெரும்பகுதி இறக்குமதி செய்யப்படுகிறது. பிராந்திய மின்சார இணைப்புடன் சிக்கனமாக இணைப்பதற்கியலாத தூரத்திலுள்ள பிரதேசங்களில் அமைக்கப்படும் டீசல் என்ஜின்கள் உள்ள மின்சார நிலையங்களுக்காகவே,கனிஎண்ணெய் பெரிதும்பயன்படுத்தப்படுகிறது. மின்சாரம் அவசரமாகவும், தாற்காலிகமாகவும் தேவைப்படும்போதுகூட, டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன், மின்சார இணைப்புத் திட்டத்துக்குரிய மின்சக்தியை அதிகரிப்பதற்கும், டீசல் என்ஜின்கள் பயன்படுத்தப்படுகின்றன.

அணு சக்தி

மின்சார உற்பத்திக்காக, அணு சக்தியைப் பயன்படுத்துவது இன்னும் பரீட்சார்த்தக்கட்டத்திலேயே இருக்கிறது. ஆனபோதிலும், உலக முன்னேற்றத்துக்கேற்றவாறு நம் நாடும் முன்னேறுவதற்கான திட்டங்களும், நம் நாட்டில் கிடைக்கும் மோனஸைட் போன்ற அணு சக்திப் பொருளைப் பயன்படுத்துவதற்காக திட்டங்களும் வகுக்கப்பட்டுவருகின்றன.

ஜலசக்தி

ஒரு நாட்டின் நிரந்தரச் செல்வமாக விளங்குவது அந் நாட்டில் கிட்டும் ஜல சக்தியாகும்; ஏனெனில், ஒவ்வொரு வருஷமும் பெய்யும் மழை மூலம் ஜல ஆதாரங்கள் வளம்பெறுகின்றன; குறைவதில்லை. நம் நாட்டில், ஜல ஆதாரங்கள் மிகவும் வளம் பெற்று விளங்குகின்றன

வென்பது, மத்திய ஜல, மின்சார கமிஷனின் மின்சாரப் பிரிவினர் இப்போது நடத்திவரும் இந்திய ஜல மின்சார சக்தி சர்வேக்கள் மூலம் தெரியவருகிறது. 1921-வருஷத்தில், ஸ்ரீ ஜே. டபிள்யூ. மியர்ஸ், இந்தியா, பாக்கிஸ்தான் பர்மா ஆகிய நாடுகளில் கிட்டக்கூடிய ஜல-மின்சார சக்தி மொத்தம் 56 லட்சம் கிலோ வாட் என மதிப்பிட்டார். அந்த மதிப்பீட்டின்படி, இப்போது இந்தியாவில் கிடைக்கக்கூடிய ஜல-மின்சார சக்தி 35 லட்சம் கிலோ வாட் ஆகும். இப்போது ஜல-மின்சாரம், தல அமைப்பு, ஆகியவைபற்றிக் கிடைக்கும் சிறந்த தகவல்களைக் கொண்டும், நவீனமுறைகளைப் பின்பற்றிக் கட்டப்படும் பெரிய தேக்கங்கள், குடைபாதைகள் ஆகியவற்றைக் கொண்டும். நீர் வளத்தைச் சிறந்த வகையில் கட்டுப்படுத்திப்பயன்படுத்துவது சாத்தியமாகையால் இப்போது நம் நாட்டின் ஜல-மின்சார சக்தி மொத்தம் சுமார் 350 லட்சம் கிலோ வாட் என்று மதிப்பிடலாம்.

தென்னிந்தியாவில் கீழ்த் திசை நோக்கிச் செல்லும் ஆறுகள், மேற்கு மலைத் தொடர்களிலிருந்து மேற்குத் திசையில் பாயும் நதிகள், மத்திய பீடபூமியிலுள்ள ஆறுகள் ஆகியவற்றின் ஜல-மின்சார ஆதாரங்கள் பற்றி, இதுவரை ஆராயப்பட்டிருக்கிறது. இவ்வாராய்ச்சிகள் மூலம் சேகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள புள்ளி விவரங்கள், ஜல-மின்சார நிலையங்களை நிர்மாணிப்பதற்கான பிரதேசங்களைத் தெரிந்தெடுத்து, மேலும் ஆராய்ச்சிகள் நடத்தி, அப்பிரதேசங்களில் நிலையங்களை அமைப்பதற்கு மிகவும் பயன்படுகின்றன. எல்லா நதிதீரங்களைப் பற்றியும் ஆராயும்வரை, இந்த ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்துவதென உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிறகு, ஒவ்வொரு நதி தீரத்திலும் சிக்கனமாக மின்சாரத்தை எந்த அளவில் உற்பத்தி செய்யக்கூடும் என்பதை

மதிப்பிடுவதற்காக, ஜல – மின்சார உற்பத்திக்கான பிரதேசங்களைப் பற்றி விரிவாக ஆராய்ச்சிகளை நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆராய்ச்சிகள் முடிந்தவுடன், நம் நாட்டில் ஜல-மின்சார உற்பத்திக்குரிய தோதுக்கள் எவ்வளவு இருக்கின்றனவென்றன என்பது மிகத் தெளிவாக விளங்கும்.

நூதனமான பிரச்னை

நம் நாட்டிலுள்ள ஆறுகளின் நீரோட்டம் பற்றி நூதனமான பிரச்னை ஒன்று எழுந்துள்ளது. உலகிலுள்ள மற்ற நாடுகளில் அம்மாதியான பிரச்னை எழவில்லை எனக் கூறலாம். நம் நாட்டின் பல பகுதிகளிலிருக்கும் ஆறுகளில் வருஷத்தில் சுமார் நான்கு மாத காலத்துக்கு நீர் நிறைந்து வழிந்தோடுகிறது. பிறகு வருஷம் பூராவும், அந்த ஆறுகளில் மிகவும் குறைவாக நீர் ஓடுவது வழக்கமாயிருந்து வருகிறது. கோடைப் பருவகால மழையையே முழுதும் எதிர்பார்க்கும் மத்திய பீடபூமிப் பிரதேசத்திலுள்ள ஆறுகளில், வறட்சிக் காலத்தில், பனிக்கட்டிகள் உருகுவது மூலம், ஓரளவு பெருகி ஓடுகிறது. ஆனபோதிலும், ஆற்றுநீர்ப் போக்கின் உச்ச பட்ச அளவுக்கும் குறைந்த பட்ச அளவுக்குமிடையே உள்ள விகிதாசாரம் பெருமளவில் இருக்கிறது. மேலும் இந்த ஆறுகளின் நீர்ப்பிடிப்புப் பிரதேசங்களில் வண்டல் படியும் அளவும் வருஷத்துக்கு வருஷம் பருவ மழையின் தன்மையைப் பொறுத்து கணிசமாக மாறுபடுகிறது. ஆகவே, சிக்கனமாக நதி நீரைக் கட்டுப்பாடு செய்யும் அளவைப்பொறுத்தே, பெரும்பாலும், இந்தியாவிலுள்ள ஆறுகளில் ஜல-மின்சார உற்பத்தியை அபிவிருத்தி செய்வது இருக்கும்.

நதி தீரங்களிலுள்ள ஜல–மின்சார ஆதாரங்களைப் பயன்படுத்துவதன் மூலம் மின்சார உற்பத்திக்கு மாத்திர

மல்லாமல், மற்றும் பாசன வசதி, நதிப் போக்குவரத்து. வெள்ளத் தடுப்பு ஆகியவற்றிற்கான வசதிகளேயும் பெற முடியும். தேக்கப்படும் நீரைப் பல காரியங்களுக்கு உப யோகப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளே முடிந்த வரை பயன்படுத்தி ஜலத்தைப் பயன்படுத்துவதற்காகும் செல்வையும் அதன்மூலம் கிட்டும் நன்மைகளேயும் பரவ லாக விநியோகிக்க முயற்சிக்கப்படுகிறது. சில இடங் களில் பாசனத்துக்காகக் கட்டுப்பாடு செய்யப்பட்டுள்ள நீரைப்பயன்படுத்தி ஜல-மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது. மற்றும் சில இடங்களில், ஜல-மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்காகக் கட்டுப்படுத்தப் பட்டுள்ள நீர், வருஷம் பூராவும், பாசனத்துக்காகக் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது, தேக்கப்படும் நீரைப் பய்ன்படுத்தும் முறை பிராந்தியத்துக்குப் பிராந்தியம் வேறுபட்டும், திட்டங்களுக்குத் தகுந்தவாறு மாறுபட்டும் இருக்கும். ஆன போதிலும், மொத்தமாக, உச்சபட்ச அளவில் பலன்களேப் பெறுவதே அம்முறையின் பிர தான நோக்கமாகும்.

# அரசியல் அமைப்பில் மனித உரிமை

இந்திய அரசியல் சட்டத்தின் முதலாவது நகலின் அச்சிட்ட பிரதி ஒன்று அமெரிக்காவின் தலைநகரில் அமெரிக்கக் காங்கிரஸ் நூல் நிலையத்தில் உள்ளது. அதனைத் திறந்து பார்த்துப் படிக்கும் அரசியல் கலை மாணவர்கள் அதன் பக்கங்களின் ஓரங்களில் உள்ள குறிப்புக்களைக் காணத் தவற மாட்டார்கள். அக்குறிப்புக்கள் அரசியல் சட்டத்து ஷரத்துக்கள் எங்கிருந்து எடுக்கப்பட்டவை என்பதைக் குறிப்பவை. அவற்றுள் பல அமெரிக்க அரசியல் சட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றன. அந்த ஷரத்துக்களைப் படித்துப் பார்த்தால் ஓர் உண்மை விளங்கும். இந்திய அரசியல் சட்டத்தை வகுத்தவர்களுக்கும் அமெரிக்க அரசியல் சட்டத்தை வகுத்தவர்களுக்கும் நோக்கம் பெரிதும் ஒன்றே என்பது புலனாகும்.

நாட்டு மக்களுக்கே உரியவையெனத் தனிப்படுத்தியுள்ள அடிப்படை உரிமைகளை இரு நாடுகளின் அரசியல் சட்டங்களும் எடுத்துரைப்பது அறிந்து பாராட்டத் தக்கது. மக்கள் உரிமைகளைப் பற்றி விரிவாகவும் ஒன்று விடாமலும் இந்திய அரசியல் சட்டம் கூறுவது போல் இதுவரை வேறு எந்நாட்டு அரசியல் சட்டமும் கூறவில்லை. நாட்டிலுள்ள குடி மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிய உரிமைகளை அமெரிக்க அரசியல் சட்டத்தில் உரிமைகள் மசோதா என்னும் இடத்தில் காண்கிறோம். இந்த உரிமைகள் மசோதா 1789-ல் பிரான்சில் தேசிய சபை மனிதனுடைய உரிமைகள் என்று ஒரு பிரகடனம்

வெளியிட்டதைப் பார்த்து அமெரிக்கர் உருவாக்கியதாகும். அவ்வாறு உருவாக்கியவர்கள் அதனைத் தங்கள் நாட்டு ஆட்சிமுறைக்கு அடிப்படைச் சட்டமான அரசியல் சட்டத்திலும் சேர்த்துவிட்டார்கள். மக்களுடைய உரிமை பற்றின விவரத்தை முதன்முதல் அரசியல் சட்டத்தில் அமைத்தவர்கள் அவர்களே.

இவ்வாறு இரு நாட்டு அரசியல் சட்டங்களிலும் இடம் பெற்ற இந்த அடிப்படை உரிமைகள் சொல்வது என்ன? மனிதனாய்ப் பிறந்தவன் ஒவ்வொருவனுக்கும் இயற்கையாகவே ஒரு மாண்பு உண்டு; மதிப்பு உண்டு; பிரித்தற்கரிய உரிமைகள் உண்டு. ஆகவே மக்கள் தங்கள் வளர்ச்சிக்கும் செழித்த வாழ்வுக்கும் சுதந்திரம் உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். இக்கொள்கையே இந்தியக் குடியரசின் வரலாற்றிலும் சிறந்ததோர் அம்சமாக விளங்கிவருகிறது.

இந்திய நாடு எய்த நினைக்கும் குறிக்கோள் ஒன்றே. நாட்டில் ஒவ்வொருவரும் தத்தமக்கு விருப்பமான வாழ்க்கை நெறியைத் தெரிந்துகொண்டு, அறிவுக்கும் உயிருக்கும் இறைவன் அளித்தகொடைகளை வளர்த்து வாழ வேண்டும்; அதற்கு வாய்ப்பானதாய் மதச் சார்பற்ற ஜனநாயக ஆட்சி முறையை நிலைநாட்டுவதே இந்தியவின் லட்சியம்

சுதந்திரத்தைக் கண்டவர்கள் தங்கள் உள்ளத்தின் பேராவல்களை நிறைவேற்ற விரும்புவார்கள். அவர்கள் விரும்பும் ஆட்சி முறையும் இயற்கை அறநெறிப்பட்ட ஆட்சியே; எதேச்சாதிகாரிகளின் தான்தோன்றித்தனமான ஆட்சி அன்று.

உலகில் பெரிய ஜனநாயக நாடுகளில் இந்தியாவும் ஒன்று. நாட்டின் விடுதலை நீண்டகாலம் போராடிப்

பெற்ற விடுதலையாகும். நாட்டுக்கும் உலகத்துக்கும் வேண்டுவது சுதந்திரம் என்று இந்திய நாட்டின் அரசியல் சட்டங்களும் மற்ற ஸ்தாபனங்களும் எடுத்தியம்புகின்றன. சுதந்திர மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் விளங்க அறிந்து நட்புறவு கொண்டு வாழ்வதற்கு உறுதியான அடிப்படையாக அமையும் இன்றியமையாக் கொள்கைகளை இந்திய அரசியல் சட்டங்கள் வலியுறுத்துகின்றன.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at
Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

# கவுண்டர் & கம்பெனி லிமிடெட்

| தலைமை ஆபீஸ்: | கிளை ஆபீஸ் & ஷோரூம் |
| --- | --- |
| கூட்ஸ் ஷெட் ரோடு | 7/69, [illegible] ரோடு |
| பொள்ளாச்சி. | கோயமுத்தூர் |

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடேஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

---

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.

# மஹாலெக்ஷ்மி டெக்ஸ்டைல் மில்ஸ்

## லிமிடெட்

பசுமலை, மதுரை

தந்தி: "மஹாலெக்ஷ்மி மதுரை" டெலிபோன்: 74

## 25,200 கதிர்கள்

16 நெம்பர் முதல் 40 நெம்பர் வரை கைத்தறிகளுக்கும், இயந்திரத் தறிகளுக்கும் தேவையான முதல் தர பாவு நூல்கள் தயாரிக்கப்படுகின்றன.

மானேஜிங் ஏஜண்டுகள்:

செ. சி. நா. லெக்ஷ்மணன் செட்டியார் அன் கோ.,

பசுமலை, மதுரை